# இஸ்லாம்

# தரம் 5

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள

முதலாம் பதிப்பு 2019

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0062-6

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,*
*நிம்தரா பிரின்டஸ் கம்பனி*
*இல்: 30/1, பன்சல வீதி, பட்டிவில கோனவல, களனி*
*அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.*

## தேசிய கீதம்

*ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே.*

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

<u>கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி</u>

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்திறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

டபிள்யூ.எம்.ஜயந்த விக்கிரம நாயக்க — **கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்**

டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி — **கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
(அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்**

அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான் — **உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**எழுத்தாளர் குழு**

அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி — **ஆசிரிய ஆலோசகர்,**
வலயக் கல்விப் பணிமனை,
மினுவங்கொடை.

அஷ்ஷெய்க் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான் — **சிரேஷ்ட ஆசிரியர்,**
பாபுஸ் ஸலாம் மகா வித்தியாலயம்,
நாம்புலுவ, பஸ்யால.

ஜனாப் எம்.எச்.எம். நாளிர் — **வளவாளர் (ஓய்வுநிலை),**
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

மௌலவியா எம்.என்.எப். நிஸாயா — **ஆசிரியை,**
பாபுஸ் ஸலாம் மகா வித்தியாலயம்,
நாம்புலுவ, பஸ்யால.

அஸீமா ஹுஸைன் — **சிரேஷ்ட ஆசிரியை,**
ரோயல் கல்லூரி,
கொழும்பு 07.

ஜனாப்.முஹம்மத் நிஸ்பர் நிளார் — **பொறுப்பாசிரியர்,**
குல்லிய்யதுர் ரஷாத் அரபுக் கல்லூரி,
கொழும்பு 14.

**பதிப்பாசிரியர் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் — **பிரதிப் பணிப்பாளர்,** நளீமிய்யா இஸ்லாமியக் கலாபீடம், பேருவளை. **பிரதித் தலைவர்,** அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா.

ஜனாப் இஸட். தாஜுதீன் — **பணிப்பாளர்,** முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு, கல்வி அமைச்சு.

அஷ்ஷெய்க் எம்.எஸ். அப்துல் பாரி — **முதுநிலை விரிவுரையாளர்,** அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம்.

அஷ்ஷெய்க் ஜே.எம். ஜஸார் — **விரிவுரையாளர்,** சமயப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

அஷ்ஷெய்க் எம்.ரீ. அப்துர் ரஹ்மான் — **உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,** கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**மொழிப் பதிப்பு**

ரிம்ஸா முஹம்மத் — **பிரதம ஆசிரியர்,** பூங்காவனம் சஞ்சிகை, கல்கிசை.

**சரவைப் பார்த்தல்**

அஷ்ஷெய்க் ஏ. அப்துஸ் ஸமது — **பிரதிப் பணிப்பாளர்,** வடமத்திய மாகாணக் கல்வித் திணைக்களம், அனுராதபுரம்.

**இறுதி மதிப்பீடு**

மௌலவி எம்.ஐ.எம்.நவ்பர் தீன் — **உதவிக் கல்விப் பணிப்பாளர்,** முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு கல்வி அமைச்சு.

மௌலவி எம்.ரீ. இக்பால் — **ஆசிரிய ஆலோசகர்,** வலயக் கல்விப் பணிமனை, கொழும்பு - 02

மௌலவி எஸ்.எல்.முஜீப் தீன் — **ஆசிரியர்,** அல் முபாரக் தேசிய பாடசாலை. மல்வான.

**தளக்கோளம், கணினி வடிவமைப்பு**

கந்தையா சுதாகரன் — **கணினி வடிவமைப்பாளர்,** கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**அட்டை வடிவமைப்பு**

ஜனாப். எம்.டபிள்யூ.ஏ. அஸார் — **கணினி வடிவமைப்பாளர்,** 6 F, ரக்ஸபான, மல்வான.

**சித்திரம்**

எம்.என்.எப்.ஸிஹானா — ஆசிரியை கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி, மதுரங்குளி

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அல்லாஹ் | 1 |
| 2. | ஸுப்ஹான மவ்லானா | 6 |
| 3. | கலிமது ரத்துல் குப்ர் | 8 |
| 4. | மறுமை நாள் | 11 |
| 5. | கழா கத்ர் | 14 |
| 6. | அல்குர்ஆன் | 18 |
| 7. | ஸூரதுல் அஸ்ர் | 22 |
| 8. | ஸூரதுன் நஸ்ர் | 25 |
| 9. | அர்கானுல் இஸ்லாம் | 28 |
| 10. | தொழுகை | 31 |
| 11. | ஸகாத் | 34 |
| 12. | நோன்பு | 37 |
| 13. | ஹஜ்ஜின் முக்கியத்துவம் | 40 |
| 14. | ஸுன்னத் தொழுகை | 44 |
| 15. | சுற்றாடலைப் பேணுவோம் | 47 |
| 16. | கழிவகற்றல் | 51 |
| 17. | நேரம் பேணல் | 56 |
| 18. | நன்மையை ஏவுவோம் தீமையைத் தடுப்போம் | 60 |
| 19. | நற்கருமங்களுக்கு ஒத்துழைபோம் | 64 |
| 20. | நல்ல நண்பர்கள் | 68 |
| 21. | எளிமையும், சிக்கனமும் | 72 |
| 22. | இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி | 76 |

## பாடநூல் கருப்பொருட் பாடல்

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்
வாசமே
கண்களில் காட்சி தோன்றும் எமது
உலகமே வெளிச்சமே...//

புத்தகம் அறிவு வரும் முகங்களில்
மகிழ்வு தரும்
புதிய புத்தகம் புதிய பொலிவு பெறும்
தினமுமே.

புத்தகம் கண்கள் தானே அதை
காப்பது போலவே
அறிவைத் தரும் புத்தகங்களை
மகிழ்வுடன் காப்போமே.

மனதில் பூ பூத்திடும் புதிய புத்தகம்...//

பாடலாசிரியர் :- சரத் குமார பெரேரா
இசை :- மகேஷ் தெனிப்பிட்டிய

# 1 அல்லாஹ்






***மாணவர்களே! மேலே உள்ள காட்சிகளைப் பாருங்கள் அவை எதற்காக?***

இரவும் பகலும் எதற்காக?
காற்றும் மழையும் எதற்காக?
மரமும் செடியும் எதற்காக?
நிலத்தில் தண்ணீர் எதற்காக?

***புவியில் மனிதன் வாழ்வதற்கே!***

நாம் புவியில் வாழ்வதற்காக அல்லாஹ் எத்தனையோ வளங்களையும் வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளான். அவற்றுள் முக்கியமான சிலதையே மேலே உள்ள பாடல் வரிகள் எமக்கு சுட்டிக் காட்டுகின்றன. அவை இல்லாவிடில் மனிதனால் வாழ முடியாது.

மனிதனின் தேவைகளை அறிந்தே அல்லாஹ் அவற்றைப் படைத்துள்ளான். நாம் அவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலும் வைத்துள்ளான். எனவேதான் அந்த அல்லாஹ்வை நாம் **'றப்பு'** (எஜமானன்) என்று ஏற்றுக்கொள்கின்றோம்.

மனிதர்கள் ஏனைய உயிரினங்கள், தாவரங்கள், வானம், பூமி, அதிலுள்ளவை, மற்றும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துக்கும் அல்லாஹ் றப்பாக இருக்கிறான். அல்லாஹ்வே அனைத்தினதும் தேவைகளை அறிந்து அவற் ய்பவனாகவும் உள்ளான். எனவேதான் அல்லாஹ்வை رَبُّ الْعٰلَمِيْنَ 'றப்புல் ஆலமீன்' (அகிலங்களின் எஜமானன்)என்றும் அழைக்கின்றோம்.





அவ்வாறெனில் அவன் மனிதர்களினதும் எஜமானனல்லவா

அல்லாஹ் எமது எஜமானன் என்றால் நாம் அவனது அடிமை களாவோம். எனவே எமது எஜமானனாகிய அல்லாஹ்வையே நாம் வணங்க வேண்டும். அவனிடமே உதவி தேட வேண்டும். அவனைத் தூய்மைப்படுத்தவும் **(தஸ்பீஸ் செய்யவும்)** வேண்டும். எமது எஜமான் அல்லாஹ்வை நாம் **ஸுப்ஹானல்லாஹ்** (அல்லாஹ் தூயவன்) என்று திக்ர் செய்கிறோம் அல்லவா? ஏன் அவ்வாறு சொல்கிறோம் என்று சிந்தித்தோமா?

''ஜாஹிலிய்யத்'' எனப்படும் அறியாமைக் காலத்தில் அரேபியர்கள் இறைவனின் படைப்புக்களான மரத்தை வணங்கினார்கள். சூரியனையும் சந்திரனையும் வணங்கினார்கள். நட்சத்திரங்களையும் கிரகங்களையும் வணங்கினார்கள். கல்லையும் மண்ணையும்

வணங்கினார்கள். தாம் விரும்பியவாறு பல்வேறு பொருட்களையும் வணங்கினார்கள். இவற்றை வணங்குவதன் மூலம் அல்லாஹ்வின் அன்பைப் பெறலாம் என்றும் அவனை நெருங்கலாம் என்றும் நினைத்திருந்தார்கள். மேலும் இவை அல்லாஹ்விடம் தமக்காகப் பரிந்து பேசும் என்றும் நம்பியிருந்தார்கள். இத்தகைய மனிதர்கள் மத்தியிலேயே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபியாக அனுப்பப்பட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மக்கள் மத்தியில் அல்லாஹ்வையே வணங்க வேண்டும் என்று போதித் தார்கள். மாற்றமாக அல்லாஹ்வின் படைப்புக்களை வணங்குவது 'ஷிர்க்' (அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்) என்றும் அதுபெரும் பாவங்களில் ஒன்று என்றும் எச்சரித்தார்கள். மனிதன் அல்லாஹ்வை மறக்கின்ற போதுதான் ஷிர்க்கில் ஈடுபடுகிறான் என்பதை உணர்த்தி அவனை என்றும் நினைவுபடுத்துவதற்கான திக்ர்களையும் கற்றுக் கொடுத்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை நினைவுபடுத்துவதற்காகக் கற்றுக் கொடுத்த திக்ருகளில் ஒன்றுதான்; **ஸுப்ஹானல்லாஹ்** என்ற வார்த்தையாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதைக் காலையிலும் மாலையிலும் பலமுறை கூறி வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் படைப்புக்களைப் பற்றிச் சிந்திக்கின்ற போதும் அதனைக் கூறி வந்தார்கள்.



நாமும் அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி சிந்தனை செய்யப் பழக வேண்டும். வானத்தில் உள்ள சூரியன், சந்திரன், ஏனைய நட்சத்திரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் படைப்புக்களே. பூமியில் உள்ள சிற்றெரும்பு முதல் பிரமாண்டமான மலைகள் வரை அனைத்துமே அல்லாஹ்வின் படைப்புக்களே. எமது கண்களுக்குத் தென்படுகின்றவை அனைத்துமே அல்லாஹ்வின் படைப்புக்களே.

அல்லாஹ் தன் படைப்புக்களை ஏன் படைத்தான்? எப்படிப் படைத்தான் அவற்றை எவ்வகையில் இயக்குகிறான். எவ்வாறு பராமரிக்கிறான் என்ற வினாக்களுக்கு விடைகாண முயற்சிப்பதே அல்லாஹ்வின் படைப்புகள் பற்றிச் சிந்திப்பதாகும். அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி சிந்திக்கின்ற போதெல்லாம் நாம் ஸுப்ஹானல்லாஹ் என்று கூறுவோம். அவ்வாறே அல்குர் ஆன் எமக்குத் கற்றுத் தருகின்றது

**நாம் ஸுப்ஹானல்லாஹ் என்று கூறுவதன் மூலம்**

★அல்லாஹ் இணையற்றவன் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

★அல்லாஹ் அனைத்திலும் பூரணமானவன் என்பதை உறுதிப் படுத்துகிறோம்.

★ அல்லாஹ் எவ்வித குறைகளும் அற்றவன் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

★அல்லாஹ் அழிவற்றவன் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

★ அல்லாஹ்வுக்கு நிகராக எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

★அல்லாஹ் தேவைகள் எதுவும் இல்லாதவன் என்பதை உறுதியாக நம்புகின்றோம்.

★எவரது உதவியும் இன்றியே அல்லாஹ் அனைத்தையும் படைத்தான் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

நாம் **''ஸுப்ஹானல்லாஹ்''** என்று திக்ர் செய்யும் போது அல்லாஹ் மிகவும் மகிழ்ச்சியடைகிறான். எம்மை நேசிக்கிறான். எமக்கு அதிகமான நன்மைகளை வழங்குகிறான்.

**எனவே நாமும் அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி சிந்திப்போம் ஸுப்ஹானல்லாஹ் என்று கூறி அவனை திக்ரு செய்வோம்.**

***பயிற்சி:***

1) சரி பிழை கூறுக.

*1.* அல்லாஹ் மனிதர்களுக்கு மட்டுமே றப்பு ஆவான். ( )

*2.* அல்லாஹ் அனைத்தையும் படைத்துப் பரிபாலிப்பதால் அவனை றப்புல் ஆலமீன் என்கிறோம். ( )

*3.* ஸுப்ஹானல்லாஹ் என்பதன் பொருள் அல்லாஹ் மிகப் பெரியவன் என்பதாகும். ( )

*4.* படைப்புக்களை வணங்குவது ஷிர்க் என அழைக்கப் படும். ( )

2) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

*1.* ஷிர்க் என்பதன் பொருள் யாது?

*2.* அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றிச் சிந்திக்கின்ற போது நாம் என்ன சொல்ல வேண்டும்?

*3.* ரப்புல் ஆலமீன் என்றால் என்ன? அவ்வாறு அழைக்கப் படுபவன் யார்?

*4.* ஸுப்ஹானல்லாஹ் என்ற வார்த்தை மூலம் நாம் உறுதிப்படுத்தும் மூன்று விடயங்களைத் தருக.

# 2 ஸுப்ஹான மவ்லானா

வானம் படைத்தோனே
வையம் படைத்தோனே
வணக்கதிற்குரியோனே
வல்லோனே அல்லாஹ்வே

அன்பின் ஊற்று நீயே
அருளின் வடிவம் நீயே
அகத்தில் நிறைந்தவனே
அதிகமுனை நினைப்போமே

மனிதன் உனை மறந்தால்
மண்ணை வணங்கிடுவான்
மரத்தை வணங்கிடுவான்
மகிமையை இழந்திடுவான்

மலக்குகள் அவை தனிலே
மாட்சிமை கொண்டவன் நீ
மட்டிலா உன் புகழ் முன்
மண்டியிடும் மாந்தரே நாம்

பார்வையைத் தந்தாய் நீ
படிப்பினைகள் நாம் பெறவே
படைப்பினங்கள் பல வைத்தாய்
பார்த்தோம் உன் மகிமைதனை



எண் திசைகள் சான்றாக,
எதற்கும் இணையுண்டு
ஏகனே உனக்கில்லை
எதுவுமே இணையாக

அளவிலா அருட்கொடைகள்
அவனியில் வைத்தவனே
அனைத்துமே அழிந்திடும் நாள்
அழிவிலா நித்தியன் நீ

துன்பம் வரும் போது
துணையாய் நிற்பவனே
துதிப்போம் உனைத் தினமும்
தூயோன் ரஹ்மானே!

சுமைகள் போக்கிடுவாய்
சுகத்தைத் தந்திடுவாய்
சுவனம் அருளிடுவாய்
ஸுப்ஹான மவ்லானா




**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மனிதன் அல்லாஹ்வை மறந்துவிடுவதால் செய்யக் கூடிய இரு செயல்களைக் குறிப்பிடுக.
2. இப்பாடலில் கூறப்பட்டுள்ள அல்லாஹ் எமக்களித்துள்ள அருட்கொடைகள் மூன்று கூறுக.

# 3 கலிமது ரத்துல் குப்ர்

*கலிமாக்கள் அல்லாஹ் பற்றிய அடிப்படை நம்பிக்கைகளை மிகச் சுருக்கமாகவும் எளிமையான வார்த்தைகளிலும் தருகின்றன. கலிமாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹதீஸ்களில் இருந்து பெறப்பட்டவையாகும். அவை, நாம் இலகுவாக மனனமிடும் வகையிலும் அவற்றைக் கொண்டு திக்ர் செய்வதற்கு வசதி யாகவும் இருக்கின்றன.*

*நாம் முன்னைய வகுப்புக்களில் நான்கு கலிமாக்களைக் கற்றோம். இப்போது ஐந்தாவது கலிமாவான **'கலிமது ரத்துல் குப்ர்'** ஐக் கற்றுக் கொள்வோம்.*

كَلِمَةُ رَدُّ الْكُفْرِ

اَللّٰهُمَّ إِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ اَنْ اُشْرِكَ بِكَ شَيْئًا وَاَنَا اَعْلَمُ

وَاَسْتَغْفِرُكَ لِمَا لَا اَعْلَمُ إِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ

تُبْتُ عَنْهُ وَتَبَرَّاْتُ عَنْ كُلِّ دِيْنٍ سِو ي دِيْنِ الْإِسْلَامِ

وَاَسْلَمْتُ وَآمَنْتُ وَأَقُوْلُ لَآ اِلٰهَ اِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அன் உஷ்ரிக பிக சைஅன் வஅன அஃலமு வஅஸ்தஃபிருக லிமா லா அஃலமு இன்னக அன்த அல்லாமுல் குயூப். துப்து அன்ஹு வதபர்ரஃது அன் குல்லி தீனின் ஸிவா தீனில் இஸ்லாம். வஅஸ்லம்து வஆமன்து வஅகூலு லா இலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரஸூலுல்லாஹி

**இறைவா, நான் அறிந்த நிலையில் உனக்கு எதனையும் இணை யாக்குவதை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நான் அறியாமல் செய்தவற்றில் இருந்து உன்னிடம் நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன். நிச்சயமாக நீயே மறைவானவற்றை நன்கறிந்தவன். நான் உன்னிடம் மீண்டுவிட்டேன். இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர ஏனையவற்றில் இருந்து நான் நீங்கிவிட்டேன். மேலும் நான் இஸ்லாம் ஆகிவிட்டேன். ஈமான் கொண்டு விட்டேன். மேலும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் எடுத்துரை க்கின்றேன்.**

**இந்தக் கலிமாவை நாம் கூறும் போது பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்துகின்றோம்.**

- ★ ஷிர்க்கில் இருந்து முழுமையாக நீங்குதல்.
- ★ மறைவானவற்றையும் அல்லாஹ் நன்கு அறிந்தவன் என்பதை ஏற்றுக்கொள்ளல்.
- ★ இஸ்லாத்தில் முழுமையாக நுழைதல்.
- ★ அல்லாஹ்தான் ஒரே இறைவன் என்று உறுதி கொள்ளல்.
- ★ முஹம்மத் **ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அல்லாஹ் வின் தூதர் என்று ஏற்றுக் கொள்ளல்.

மாணவர்களே! சைத்தான் மனிதர்களின் உள்ளங்களில் ஊடுருவிக் கொண்டே இருப்பான். ஒருவன் ஈமான் கொள்ள வேண்டிய விடயங் களில் சந்தேகங்களை ஏற்படுத்திக் கொண்டே இருகின்றான். அவ்வாறே பாவங்கள் செய்யவும் எம்மைத் தூண்டிக் கொண்டேயிருக்கிறான். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது ஈமானைப் பாதுகாத்துக் கொள்வ தற்கும் புதுப்பித்துக் கொள்வதற்கும் கலிமாக்கள் உதவுகின்றன.

எனவே

★ நாம் கலிமாக்களைப் பொருளுடன் மனனமிடுவோம்.

★ தினமும் அவற்றை ஓதி வருவோம்.

**பயிற்சி:**

1. கீழ்வரும் அரபு வசனங்களுக்கான தமிழ் வடிவத்தை ஒவ்வொன்றுக்கும் நேரே எழுதவும்.

உதாரணம்

مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ　　　முகம்மதுர் ரஸூலுல்லாஹ்

1. إنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ
2. وَاَسْتَغْفِرُكَ لِمَا لَا اَعْلَمُ
3. اَللّٰهُمَّ إنِّيْ اَعُوْذُ بِكَ
4. تُبْتُ عَنْهُ وَتَبَرَّاْتُ عَنْ كُلِّ دِيْنٍ
5. سِو ي دِيْنِ الْإِسْلَامِ
6. مِنْ اَنْ اُشْرِكَ بِكَ شَيْئًا وَاَنَا اَعْلَمُ
7. وَأَقُوْلُ لآ اِلٰهَ اِلَّا اللهُ
8. وَاَسْلَمْتُ وَآمَنْتُ

**2. செயற்பாடு**

கலிமாவைப் பொருளுடன் மனனமிட்டு ஆசிரியரிடம் ஒப்புவியுங்கள்.

# 4 மறுமை நாள்

‘‘உலகமும் அதில் உள்ள அனைத்தும் ஒரு நாள் அழிந்து போகும். பின்னர் மரணித்தவர்கள் அனைவரும் எழுப்பப்பட்டு அல்லாஹ்வின் முன்னிலையில் விசாரிக்கப்படுவர். விசாரணையின் பின் நல்லோர்; சுவர்க்கம் செல்வர். தீயோர் நரகம் செல்வர்’’ இது எமது அடிப்படை நம்பிக்கைகளில் ஒன்று என ஏற்கனவே அறிந்துள்ளோமல்லவா .

மறுமையை நம்ப வேண்டியதன் முக்கியத்துவத்தை அல்குர்ஆனும் ஹதீஸும் வலியுறுத்துகின்றன. மறுமை நம்பிக்கை அல்லாஹ்வை அஞ்சி அவனுக்குக் கட்டுப்பட்டு வாழ எமக்கு வழிகாட்டுகிறது. நன்மை செய்யத் தூண்டுகிறது. பாவங்களை விட்டும் தடுக்கிறது.

**‘‘மறுமை நாள்’’** பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அவற்றுள் சில பெயர்களையும் அவற்றிற்கான பொருள்களையும் பின்வரும் அட்டவணையில் காண்போம்.

| அறபு | பெயர் | பொருள் |
|---|---|---|
| يَوْمُ الآخِرِ | யவ்முல் ஆகிர் | மறுமை நாள் |
| يَوْمُ البَعْثِ | யவ்முல் பஃஸ் | எழுப்பப்படும் நாள் |
| يَوْمُ الْقِيَامَةِ | யவ்முல் கியாமா | எழுந்து நிற்கும் நாள் |
| يَوْمُ الحَشْرِ | யவ்முல் ஹஷ்ர் | ஒன்று சேர்க்கப்படும் நாள் |

**மறுமையின் முக்கிய நிகழ்வுகளைச் சுருக்கமாக நோக்குவோம்.**

அல்லாஹ்வின் கட்டளைப்படி இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் **முதலாவது ஸூர்** ஊதுவார்கள். உடனே வானம் பூமி மற்றும் அவற்றில் உள்ள அனைத்தும் அழிந்துவிடும். அல்லாஹ் மட்டுமே நிலைத்திருப்பான். பிறகு நீண்ட காலம் சென்றபின் அல்லாஹ் இஸ்ராபீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை எழுப்பி **இரண்டாம் ஸூர்** ஊதுமாறு கட்டளையிடுவான்.

அதனைத் தொடர்ந்து, மரணித்தவர்கள் உயிர் பெற்று எழுவார்கள். அனைவரும் **மஹ்ஷர்** என்ற வெளியில் ஒன்று சேர்க்கப்படுவார்கள். மஹ்ஷருடைய நிலை மிகவும் பயங்கரமானது. சூரியன் தலைக்கு மேலால் கொண்டுவரப்படும். பாவிகள் தாங்க முடியாத வெப்பத் தினால் வேதனைப்படுவர். அல்லாஹ்வின் அன்பைப் பெற்றவர்கள் மாத்திரம் நிழல் பெறுவார்கள்.

அதன் பின்னர், விசாரணைகள் ஆரம்பமாகும் இது **ஹிஸாப்** எனப்படும். இவ்விசாரணைகளின் பின்னர் பட்டோலைகள் வழங்கப்படும். நன்மை செய்தவருக்கு பட்டோலை வலக்கரத்தில் வழங்கப்படும். பாவம் செய்தவருக்கு இடக்கரத்தில் வழங்கப்படும். உலகில் வாழும்போது நாம் நினைத்தவை, பேசியவை, செய்தவை முதலான அனைத்தும் அந்தப் பட்டோலைகளில் பதியப்பட்டிருக்கும்.

பட்டோலையை வலக்கரத்தில் பெற்றவர்கள் மகிழ்ச்சியடைவார் கள். மற்றவர்களுக்கும் அதைக் காண்பித்து இன்புறுவார்கள். இடக் கரத்தில் பெற்றவர்களோ கவலையினாலும் வேதனையினாலும் துன்புறுவார்கள். தனது பட்டோலை தனக்குக் கிடைக்காமல் இருந் திருக்கக் கூடாதா? எனப் புலம்புவார்கள். இந்நிகழ்வுகளை அல்குர் ஆன் தெளிவாகக் கூறுகின்றது.

தொடர்ந்து மக்கள் **ஸிராத்** எனும் பாலத்தைக் கடந்து செல்வார்கள். அதில் ஒவ்வொருவரும் தாம் செய்த நன்மைக்கேற்ப வேகமாகவும் மெதுவாகவும் தவழ்ந்தும் கடக்க முயற்சிப்பர். பாவிகள் அதைக் கடக்க முடியாமல் நரகில் விழுவார்கள்.

ஸிராத்தைக் கடந்து சென்றவர்களே வெற்றியாளர்கள். அவர்கள் சுவனம் செல்வார்கள். அதில் அவர்கள் நிரந்தரமாகத் தங்குவார்கள். கற்பனை செய்ய முடியாத இன்பங்களை அங்கு அனுபவிப்பார்கள்.

**எனவே**

**★ நாமும் அதிக நன்மைகள் செய்து சுவனம் செல்ல முயற்சிப்போம்.**

**★ சுவனத்தை வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்.**

**பயிற்சி**

1. மறுமை நாள் அரபியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. ஸூர் ஊதுவதற்குப் பொறுப்பான மலக்கின் பெயர் யாது?
3. மறுமையின் நிகழ்வுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
4. இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் நிகழும் முக்கிய நிகழ்வு யாது?
5. விசாரணையின் பின்னர் சந்தோஷமாகக் காணப்படுவர் யார்?

# 5 கழா கத்ர் (அல்லாஹ்வின் நியதி)

நாம் கடைகளில் பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்குகின்றோம் அல்லவா? அங்கே குறித்த திகதி வரைதான் அப்பொருட்களைப் பாவிக்க முடியும் என்றும் அதன் பின் அது காலாவதியாகிப் போகும் என்றும் எழுதப்பட்டுள்ளதைப் பார்க்கிறோமல்லவா இவ்வாறு எப்படி முன்கூட்டியே எழுதி வைக்க முடியும் என சிந்தித்தோமா?

குறித்த பொருளை உற்பத்தி செய்தவர்கள் அப் பொருள் பற்றி நன்கறிவார்கள். அதனால்தான் அப்பொருள் எப்போது காலாவதியாகும் என்பதை அறிந்து அதனை முன்கூட்டியே எழுதி வைப்பார்கள்.

இவ்வாறுதான் படைப்பாளனாகிய அல்லாஹ் அவன் படைத்த உயிருள்ள, உயிரற்ற அனைத்தைப் பற்றியும் நன்கறிந்தவனாக உள்ளான். எனவே அவன் அவற்றுடன் தொடர்பான அனைத்து விடயங்களையும் முன்கூட்டியே எழுதி வைத்துள்ளான்.

அவன் எழுதி வைத்தபடிதான் அனைத்தும் நடைபெறுகிறது. இவ்வாறு எழுதி வைப்பது அல்லாஹ்வுக்கு மிகவும் இலேசான காரியமாகும்.



பிரபஞ்சத்திலுள்ள படைப்புக் களாகிய சூரியன், சந்திரன், நாம் வாழும் பூமி, நட்சத்திரங்கள் போன்றவற்றின் அசைவுகள், அவற்றின் முடிவு, என்பவற்றை அல்லாஹ் முன் கூட்டியே எழுதி வைத்துள்ளான்.

சிறிய மரங்களில் பெரியகனிகளும், மிகப் பெரிய மரங்களில் மிகச் சிறிய கனிகளும் ஒரு திட்டத்தின் அடிப்படையிலேயே அல்லாஹ்வால் படைக்கப்பட்டுள்ளன.

மழை, வெயில், காற்று, வரட்சி, இயற்கை அனர்த்தங்கள் போன்றன எங்கு, எப்போது நிகழும் என்பதையும் அல்லாஹ் முன்கூட்டியே எழுதி வைத்துள்ளான்.

உயிரினங்களின் பிறப்பு, இறப்பு, வளர்ச்சி, அவற்றுக்கான உணவு போன்றன எங்கு, எப்போது, எந்த அளவு கிடைக்கும் என்பதையும் அல்லாஹ் முன்கூட்டியே எழுதி வைத்துள்ளான்.

மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய இலாபம், நட்டம், இன்பம், துன்பம் மற்றும் அவனது நடவடிக்கைகள் அனைத்தையும் அல்லாஹ் முன்கூட்டியே எழுதி வைத்துள்ளான்.


அல்லாஹ் முன்கூட்டியே எழுதி வைத்துள்ளபடி அனைத்தும் நிகழும் என்பதே 'கழா கத்ர்' பற்றிய நம்பிக்கை என அழைக்கப் படுகிறது. இது ஈமானின் ஆறாவது அம்சமாகும். கழா கத்ரை நம்பாத ஒருவர் முஃமினாக மாட்டார்.

இன்பம், துன்பம், நோய், ஆரோக்கியம், அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாட்டின் படியே இடம் பெறுகின்றன. இந்தக் கழாகத்ர் அல்லாஹ்வினால் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. கழாகத்ரை அல்லாஹ் ஏன் மறைத்து வைத்துள்ளான் என்பதை அறியப் பின்வரும் நிகழ்வை ஆழமாக நோக்குவோம்.

நீங்கள் பரீட்சை எழுதப் போகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பரீட்சையில் நீங்கள் சித்தியடையப் போகிறீர்கள் என்று முன்கூட்டியே அல்லாஹ் எழுதி வைத்துள்ளதை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின் ஏன் நீங்கள் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்?

அல்லது

நீங்கள் சித்தியடைய மாட்டீர்கள் என்று முன்கூட்டியே அல்லாஹ் எழுதி வைத்துள்ளதை நீங்கள் அறிந்து கொள்கிறீர்கள். என்று வைத்துக் கொள்வோம் இப்போது நீங்கள் கஷ்டப்பட்டுப் படிப்பதில் என்ன பயன் இருக்கப்போகிறது.?



''கழா கத்ரை மனிதர்கள் அறிந்து கொள்வார்களாயின், வெற்றி பெறுபவனும் முயற்சிக்க மாட்டான்: தோல்வியடைபவனும் முயற்சிக் கமாட்டான். முன்கூட்டியே எழுதப்பட்டுள்ள தனக்குரிய முடிவை அறிந்து சிலர் மகிழ்ச்சியில் இருப்பர். இன்னும் சிலர் கவலையில் இருப்பர். இதனால் உலகில் மனிதர்களது இயக்கமே இல்லாமல் போய்விடும். அவ்வாறு ஏற்படாமல் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும், முயற்சிக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் கழா கத்ரை மறைத்து வைத்துள்ளான்.

*கழா கத்ரை மறைத்து வைத்துள்ளதன் மூலம் அல்லாஹ் முக்கியமான நான்கு விடயங்களை எமக்கு உணர்த்துகிறான்.*

1. ஒவ்வொருவரும் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.
2. கழா கத்ரை பொருந்திக் கொள்ள வேண்டும்.
3. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும்.
4. பொறுமையாக இருக்க வேண்டும்.

**நாம் கழா கத்ரை பொருந்திக் கொள்கின்ற போது..**

- ★ **மகிழ்சியான முடிவுகளை ஏற்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து கின்றோம்.**
- ★ **கவலையான முடிவுகளை சகித்துப் பொறுமை காக்கின்றோம்.**
- ★ **இவற்றின் மூலம் அல்லாஹ்விடம் உயர்ந்த அந்தஸ்துக்களைப் பெற்றுக் கொள்வோம்.**

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) கழாகத்ர் என்பதன் மூலம் யாது விளங்குகின்றீர்?
2) கழா கத்ரை அல்லாஹ் மறைத்து வைத்திருப்பதற்கான காரணம் ஒன்றைக் கூறுக.
3) கழா கத்ரை ஏற்றுக்கொள்வதால் கிடைக்கும் பயன்கள் இரண் டைத் தருக.
4) கவலை, கஷ்டங்களின் போது நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

# 6 அல்குர்ஆன்
## (சிறப்பும் தொகுப்பும்)



*அல்லாஹ் மனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காக வேதங்களையும் ஸுஹுபுகளையும் அருளினான். அவற்றை நம்புவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். அவன் அருளிய இறுதி வேதம் அல்குர்ஆன் ஆகும். அது உலகம் அழியும் வரை நிலைத்திருக்கக் கூடியது. அது ஆழிய அறிவுக் கருவூலங்களைக் கொண்ட அற்புத மறையாகும். அதன் சிறப்புக்களை அல்குர்ஆனும் ஸுன்னாவும் மிக அதிகமாகவே விளக்கியுள்ளன.*

***''நிச்சயமாக அல்குர்ஆன் (மனிதர்களுக்குத் தெளிவான) மிக்க நேரான வழியை அறிவிக்கிறது''*** *(17:9)*

''மனிதர்களே, உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. அது (உங்கள்) இதயங்களில் உள்ள நோய் களைக் குணப்படுத்தக்கூடியதுமாகும். அது விசுவாசம் கொண்டவர் களுக்கு நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கின்றது.'' *(10:57)*

அல்குர்ஆனின் சிறப்புப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

''நிச்சயமாக இந்த அல்குர்ஆன் அல்லாஹ்வின் உறுதிமிக்க கயிறு, வழிகாட்டும் பேரொளி, பயன்மிகு சஞ்சீவி அதனைப் பற்றிப் பிடிப்போருக்கு அது பாதுகாப்பளிக்கும். அதனைப் பின்பற்றுவோருக்கு அது வெற்றியளிக்கும். கோணலை அது சீராக்கும். தவறுகளைச் சரிப்படுத்தும். அதன் அற்புதங்கள் முடிந்துவிடப் போவதில்லை. திரும்பத் திரும்ப ஓதுவதால் அது பழமை அடைவதுமில்லை. எனவே, அதனை நீங்கள் ஓதி வாருங்கள். அதன் ஒவ்வோர் எழுத்துக்கும் உங்களுக்குப் பத்து நன்மைகள் கிடைக்கும்.'' (ஹாகிம்)

இத்தனை சிறப்புக்கள் நிறைந்த இந்தக் அல்குர்ஆன் ஒலி வடிவிலும் வரி வடிவிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. மனித உள்ளங்களிலும் முஸ்ஹபுகளிலும் பதியப்பட்டி ருப்பதும் எவ்வித மாற்றங்களுமின்றி நிலைத்திருப்பதும் அதன் சிறப்பம்சங்களில் உள்ளவை யாகும்.



அல்குர்ஆன் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாகச் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சிறிது சிறிதாக அருளப்பட்டுள்ளது.

ஸஹாபாக்கள் அதனை மனனம் செய்தும் நடைமுறைப்படுத்தியும் எழுதிவைத்தும் பாதுகாத்துள்ளார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடன் இருக்கும் போது அல்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்ததால் அது அன்று முழுமையாக நூலுருப்படுத்தப்படவில்லை. கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சிக் காலத்தில் அல்குர்ஆனை மனனமிட்ட ஹாபிழ்கள் பலர் தற்காப்புப் போர்களின் போது மரணித்தார்கள். இதனைக் கண்ணுற்ற உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்குர் ஆனை ஒன்று திரட்டி நூலுருப்படுத்துவதன் அவசியத்தை கலீபாவுக்கு ஆலோசனையாக வழங்கினார்கள். அதனை ஏற்ற அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்குர்ஆனை நூலுருப்படுத்தும் பணியை, ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தலைமையில் ஒரு குழுவிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் அதனை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார்கள்.

கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு காலத்தில், பல்வேறு நாட்டவர்கள், கோத்திரத்தவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களிடையே அல்குர்ஆனை ஓதுவதில் சிறிய சிறிய வேறுபாடுகள் காணப்பட்டன. ஒவ்வொரு குழுவினரும் தாம் ஓதுவதே சரியானது என்று வாதிட முற்பட்டனர். இதனால் முஸ்லிம்களிடையே பிளவுகள் தோன்ற ஆரம்பித்தன. இதனை அவதானித்த ஹுதைபதுல் யமானி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இது பற்றிக் கூறி முஸ்லிம் உம்மத் பிளவுபடும் அபாயம் பற்றி எடுத்துரைத்தார்கள்.

கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அதன் பாரதூரத்தை உணர்ந்தார்கள். ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு

அவர்களின் தலைமையிலேயே ஒரு குழுவை நியமித்து, அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் அவரால் தொகுக்கப்பட்ட முதல் பிரதியைப் பார்த்துப் பல பிரதிகளை எழுதும்படி பணித்தார்கள். அவற்றைப் பல நாடுகளுக்கும் அனுப்பி வைத்ததோடு அதனை ஓதிக் காண்பிக்கத் தேர்ச்சி பெற்ற காரிகளையும் அனுப்பி வைத்தார்கள். அவர்கள். தாம் சென்ற இடங்களில் ஒரே விதமாக அல்குர்ஆனை ஓதக் கற்பித்தார்கள். இதன் மூலம் முஸ்லிம்களிடையே அல்குர்ஆனை ஓதுவதில் ஒருமித்த ஒழுங்கை ஏற்படுத்தினார்கள்.

இதனால் கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் **ஜாமிஉல் குர்ஆன்** என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்கள்.

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) அல் குர்ஆன் தொகுப்பதற்கான ஆலோசனையை முன் வைத்தவர் யார்?

2) அல் குர்ஆன் தொகுக்கும் பணிக்குத் தலைமை தாங்கியவரின் பெயர் யாது?

3) ஹாபிழ்கள் எனப்படுவோர் யாவர்?

4) அல் குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறைகள் இரண்டினைக் கூறுக.

5) அல் குர்ஆனின் சிறப்புக்கள் நான்கைத் தருக?

# 7 ஸூரதுல் அஸ்ர்

அல்லாஹ்வின் அருள் வேதமான அல்குர்ஆனின் சிறப்புக்களை நாம் படித்திருக்கின்றோம். அதன் போதனைகள் சிலவற்றைக் கற்றுக்கொள்வதற்காக நாம் ஸூரதுல் அஸ்ர் என்ற அத்தியாயத்தை நோக்குவோம்.

ஸூரதுல் அஸ்ர் மக்காவில் அருளப்பட்டது. அது மூன்று ஆயத்துக் களைக் கொண்ட ஒரு சிறிய ஸூராவாகும். இதன் முதல் வசனத்தில் வந்துள்ள **அல்-அஸ்ர்** என்ற சொல் இந்த ஸூராவின் பெயராக அமைந்துள்ளது. காலம் என்பது இதன் கருத்தாகும். இந்த ஸூராவையும் அதன் மொழிபெயர்ப்பையும் தெரிந்து கொள்வோம்.


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
وَالْعَصْرِ ۝١ اِنَّ الْاِنْسَانَ لَفِيْ خُسْرٍ ۝٢ اِلَّا الَّذِيْنَ
اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَ
تَوَاصَوْا بِالصَّبْرِ ۝٣

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஓதுகின்றேன்.

1. ‘‘காலத்தின் மீது சத்தியமாக!
2. மனிதன் (தன் ஆயுளை வீணில் செலவு செய்து) நிச்சயமாக நஷ்டத்தின் வழியில் இருக்கிறான்.’

3. ஆயினும், எவர்கள் விசுவாசங்கொண்டு, நற்கருமங்களையும் செய்து, ஒருவருக்கொருவர் சத்தியத்தை உபதேசம் செய்து (பாவங்களை விடுவதிலும் நன்மைகளை செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களை)ச் சகித்துக் கொள்ளுமாறும் உபதேசம் செய்து வந்தார்களோ அவர்களைத் தவிர (இவர்கள் நஷ்டமடையவில்லை)''

இந்த ஸூரா மனித வாழ்வின் வெற்றிக்கான பாதை எது என்பதை மிகச் சுருக்கமாகக் கூறுகின்றது. இதன் காரணமாகத்தான் ''மனிதர்கள் இந்த ஸூராவைச் சிந்தித்துப் பார்ப்பார்களாயின் அதுவே அவர்களுக்கு நேர்வழி காட்டப் போதுமானதாகும்'' என இமாம் ஷாபிஈ றஹ்மதுல் லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டார்கள். இது இந்த ஸூராவின் முக்கியத்துவத்தை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இன்று மனிதன் வினாடிகளைக் கூடக் கவனமாகப் பயன்படுத்திச் சாதனைகள் புரிவதைக் காண்கின்றோம். மனிதன் காலத்தின் மகிமையை உணர்ந்து அதைப் பயன்படுத்தத் தவறினால் பெரும் நஷ்டத்தையே எதிர்கொள்ள வேண்டி வரும். இறைவன் காட்டித்தந்தவாறு மனிதன் காலத்தைப் பயன்படுத்துவதன் மூலமே இம்மை மறுமை வெற்றியை அடைந்து கொள்ள முடியும். இதற்காகவே நன்மைகளைச் செய்வதற்காக நாம் காலத்தைப் பயன்படுத்த வேண்டும். அதனை வீணே கழிய விடக்கூடாது.

மனிதன் நஷ்டத்திலிருந்து தப்பி வெற்றி பெற வேண்டுமாயின் அவன் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை மூன்றாம் வசனம் குறிப்பிடுகின்றது. அவற்றுள் முதன்மையாக ஈமானும் நற்செயல்களும் காணப்படல் வேண்டும். அல்லாஹ் மீதுள்ள நம்பிக்கை (ஈமான்) மனிதனின் அகவாழ்வையும் புறவாழ்வையும் சீர் செய்கின்றது. (ஈமானும் நற்செயல்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துவிடாது இணைந்ததாக இருக்க வேண்டும்.) நற்செயல்கள் என்பது ஈமான் என்ற மரத்தின் கனிகளாகும்.

ஒரு மரம், அது தரும் கனிகள் மூலமே அடையாளம் காணப்படுகின்றது. அதுபோலவே ஈமானின் தூயநிலை அடையாளம் காணப்படுவதற்கு நற்செயல்கள் துணையாகின்றன.

வெற்றி அடைவதற்குரிய மற்றொரு பண்பு சத்தியத்தைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக் கொருவர் உபதேசித்துக் கொள்வதாகும். ஈமானினதும் நற்செயல்களினதும் இன்பத்தைப் பெற்ற ஒரு முஸ்லிம், தன் இன்பத்தை அடுத்தவர்களுக்கும் பகிர்ந்தளிப்பவராக இருக்க வேண்டும். அவர் தன்னைச் சூழவுள்ளவர்களுக்கு ஈமானைப் பற்றியும் நற்செயல்கள் புரிவது பற்றியும் எடுத்துரைப்பவராகவும், தீமைகளைத் தடுப்பவராகவும் இருக்க வேண்டும்.

**எனவே**

- ★ **நாம் எமது ஆயுளை வெற்றிக்குரிய வழியாக அமைத்துக் கொள்வோம்.**
- ★ **அல்லாஹ் மீது நம்பிக்கை வைத்து நற்செயல்களில் ஈடுபடுவோம்.**
- ★ **ஈமான் பற்றியும் நற்செயல்கள் பற்றியும் பிறருக்கும் எடுத்துரைப் போம்.**

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) ஸூரதுல் அஸ்ர் எங்கு அருளப்பட்டது? அதில் எத்தனை வசனங்கள் உள்ளன?

2) மனிதன் நஷ்டத்திலிருந்து தப்பி, வெற்றி பெற வேண்டுமாயின் அவனிடம் இருக்க வேண்டிய நான்கு பண்புகளும் யாவை?

3) இமாம் ஷாபிஈ றஹ்மதுல்லாஹ் அவர்கள் ஸூரதுல் அஸ்ர் பற்றிக் கூறிய கருத்து யாது?

# 8 ஸூரதுன் நஸ்ர்

முஸ்லிம்கள் எல்லோருக்கும் பரிச்சயமானதும் மனனமானதுமான ஒரு சிறிய ஸூராவே ஸூரதுன் நஸ்ர் ஆகும். ஸூரதுன் நஸ்ர் மதீனாவில் அருளப்பட்டது. அது மூன்று ஆயத்துக்களைக் கொண்டது. ஸூராவின் முதல் வசனத்தில் வந்துள்ள **நஸ்ர்** என்றசொல் இந்த ஸூராவிற்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது. இதன் பொருள் **உதவி** என்பதாகும். இது முழுமையாக இறக்கப்பட்ட ஸூராக்களுள் இறுதியானதாகும். இதற்குப் பின்னர் எந்த ஸூராவும் முழுமையாக இறக்கப்படவில்லை.

தற்போது அந்த ஸூராவையும் அதன் பொருளையும் நோக்குவோம்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اِذَا جَآءَ نَصْرُ اللّٰهِ وَالْفَتْحُ ﴿۱﴾ وَرَاَيْتَ النَّاسَ يَدْخُلُوْنَ فِيْ
دِيْنِ اللّٰهِ اَفْوَاجًا ﴿۲﴾ فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَاسْتَغْفِرْهُ
اِنَّهٗ كَانَ تَوَّابًا ﴿۳﴾

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல் லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்)

1. **அல்லாஹ்வின் உதவியும் (மக்காவின்) வெற்றியும் கிடைத்து**
2. **அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக நுழைவதையும் நீர் கண்டால்**
3. **அதற்கு நன்றி செலுத்துவதற்காக) உமது இறைவனைப் புகழ்ந்து துதி செய்து அவனுடைய (அருளையும்) மன்னிப்பையும் கோருவீராக. நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை அங்கீகரித்து) மன்னிப்புக் கோருவதை மிகவும் அங்கீகரிப்பவனாக இருக்கிறான்.**

இந்த ஸூரா ஹிஜ்ரி 10 இல், துல்ஹஜ் மாதம் அய்யாமுத் தஷ்ரீக்குடைய ஒரு நாளில் மினாவில் இறங்கியது. இது இறங்கியபோது ‘‘எனக்கு என் மரணச் செய்தி அறிவிக்கப்பட்டுவிட்டது. என் வாழ்நாள் நிறைவடைந்து விட்டது’’ (முஸ்னத் அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

இந்த ஸூரா இறக்கப்பட்டதன் பின்னர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு மாதமும் சில நாட்களும் உயிர் வாழ்ந்தார்கள். இதனால் இந்த ஸூரா ‘‘**ஸூரதுத் தவ்தீஃ**’’- (பிரியா விடைக்குரிய அத்தியாயம்) என்றும் அழைக்கப்படுகிறது.

அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் கிடைக்கும் என்பதையும் மக்கள் இஸ்லாத்தில் கூட்டம் கூட்டமாக நுழைவர் என்ற நற்செய்தியையும் இந்த ஸூறா அறிவிக்கின்றது. அல்லாஹ்வின் உதவி, அவன் வழங்கிய வெற்றி என்பன அவனிடமிருந்து வந்த பேரருட்கொடைகளாகும். இவை அல்லாவின் உதவியால் கிடைக்கப் பெற்றவை என்பதை இந்த ஸூராவில் உள்ள நஸ்ருல்லாஹ்(அல்லாஹ்வின் உதவி) என்ற சொற்றொடர் உணர்த்தி நிற்கின்றது.

மனிதனுக்கு வெற்றிகளும் உதவிகளும் கிடைக்கின்றபோது அவன் தன் இரட்சகனை மறந்து விடக்கூடாது, பெருமைப்படவோ மமதை கொள்ளவோ கூடாது. மாறாக இவைகளைக் கொடுத்த அல்லாஹ்வைப் புகழ வேண்டும். அவனைத் துதிக்கவேண்டும். அவனிடத்தில் பாவமன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதையும் இந்த ஸூரா கற்றுத் தருகின்றது.

இந்த ஸூரா அருளப்பட்ட பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் **ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அஸ்தஃபிருல்லாஹ வஅதுபு இலைஹி** என்ற பிரார்த்தனையை அதிகம் ஓதி வருபவர்களாக இருந்தார்கள். (முஸ்னத் அஹ்மத்) இதன் பொருள் **‘‘அல்லாஹ்வின் புகழ் கொண்டு அவனைத் துதிக்கின்றேன். அவனிடமே பாவமன்னிப்புக் கோருகின்றேன்’’** என்பதாகும்.

எனவே மாணவர்களே

★ நாம் வெற்றிகள் அடையும் போது அல்லாஹ்வைப் புகழ்வோம்.

**அல்ஹம்மது லில்லாஹ்**

★அவன் தந்தருளிய கொடைகளுக்கு அவனைத் துதிப்போம்.

-**ஸுப்ஹானல்லாஹ்**

★ அவனிடம் அதிகமதிகம் பாவ மன்னிப்புக் கோருவோம்.-

**அஸ்தஃ பிருல்லாஹ்**

**பயிற்சி**

***சரி பிழை கூறுக.***

1. ஸூரதுன் நஸ்ர் மக்காவில் அருளப்பட்டது. ( )
2. நஸ்ர் என்ற சொல்லின் பொருள் வெற்றி என்பதாகும். ( )
3. இந்த ஸூராவிற்குப் பிறகு வேறு எந்தவொரு ஸூராவும் முழுமையாக அருளப்படவில்லை. ( )
4. ஸூரது நஸ்ருக்கு ஸூரதுத் தவ்தீஃ என்றொரு பெயரும் உண்டு. ( )
5. நஸ்ருல்லாஹ் என்பதன் பொருள் அல்லாஹ்வின் அருள் என்பதாகும். ( )

# 9 அர்கானுல் இஸ்லாம்
## (இஸ்லாத்தின் கடமைகள்)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களின் தோழர்களான ஸஹபாக்களும் அமர்ந்திருக்கும் சபைக்கு ஒரு மனிதர் வருகிறார். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் மிக நெருக்கமாக உட்கார்கிறார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சில வினாக்களைத் தொடுக்கிறார். அவர்களும் பதிலளிக்கிறார்கள். இறுதியில் அவரும் சில விடயங்களை சொல்லிக் கொடுத்து விட்டு விடை பெற்றுச் செல்கின்றார்.

''தற்போது வந்து சென்றவர் யார் என நீங்கள் அறிவீர்களா?'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹபாக்களைப் பார்த்து வினவுகிறார்கள். அதற்கு ஸஹாபாக்கள் 'அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவர்'' எனப் பதிலளித்தார்கள். ''அவர் வேறு யாரும் அல்ல, மலக்குகளின் தலைவர் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் என கூறினார்கள். அவர் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை கற்றுத் தருவதற்காகச் சமுகமளித்துச் செல்கிறார்'' எனவும் கூறினார்கள்.

அவர் தொடுத்த வினாக்களுள் ஒன்று 'இஸ்லாம் என்றால் என்ன?' என்பதாகும். அவ்வினாவுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழங்கிய பதில் பின்வருமாறு அமைந்திருந்தது.

**''இஸ்லாம் என்பது வணங்கத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் இல்லை என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுதல் (ஷஹாதா). தொழுகையை நிலைநாட்டுதல். ஸக்காத் கொடுத்தல். ரமழான் மாதம் நோன்பு நோற்றல். வசதியுள்ளவர்கள் ஹஜ் செய்தல்''**

இவற்றையே நீங்கள் பள்ளிக்கூடங்களிலும், அஹதிய்யா போன்ற சன்மார்க்க வகுப்புகளிலும் கற்கும் 'புனியல் இஸ்லாம்' என்ற அரபுத் தொடர் எடுத்தியம்புகின்றது. அந்த அரபுத் தொடரையும் அதன் பொருளையும் நோக்குவோம்.

بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةُ أَنْ لَا إِلَهَ
إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللّٰهِ وَإِقَامُ الصَّلٰوةِ
وَإِيتَاءُ الزَّكَاةِ وَصَوْمُ رَمَضَانَ وَحَجُّ الْبَيْتِ
مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيلًا .

**புனியல் இஸ்லாமு அலா ஹம்ஸின் ஷஹாதத்து அன் லாஇலாக இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹி, வஇகாமுஸ் ஸலாதி, வஈதாஉஸ் ஸகாத்தி, வஸவ்மு ரமளான, வஹஜ்ஜுல் பைதி மனிஸ்ததாஅ இலைஹி ஸபீலா.**

**இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தாகும்**

1) வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை எனவும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனின் தூதர் எனவும் சாட்சி பகர்தல்
2) தொழுகையை நிலை நாட்டல்
3) ஸக்காத் கொடுத்தல்
4) ரமளான் மாதம் நோன்பு நோற்றல்
5) வசதியுள்ளவர்கள் ஹஜ் செய்தல்

இந்த வகையில் மேற்படி விடயங்களைக் கற்ற நாம்

★ **அவற்றை எமது வாழ்வில் எடுத்து நடப்போம்.**

★ **உண்மை முஸ்லிமாக வாழ்ந்து அல்லாஹ்விடம் அளப்பரிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வோம்.**

**பயிற்சி**

1) **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*1.* இஸ்லாத்தின் கடமைகள் எத்தனை?

*2.* நாம் எந்த மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும்?

*3.* சாட்சி கூறுதல் என்ற கருத்தைத் தரும் அரபுப் பதம் எது?

*4.* நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து சென்றவர் யார்?

***2)* செயற்பாடு**

''புனியல் இஸ்லாம்'' என ஆரம்பமாகும் அரபுத் தொடரையும் அதன் பொருளையும் மனனமிட்டு ஒப்புவிக்க.

# 10 தொழுகை

தொழுகை இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் இரண்டாவதாகும். அது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோர் நிறைவேற்ற வேண்டிய முதற் கடமையாகும்.

''.... தொழுகையை (முறைப்படி) நிலைநாட்டுங்கள். நிச்சயமாகத் தொழுகையானது நம்பிக்கையாளர்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாக இருக்கின்றது.'' *(4:103)* என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

தொழுகை முன்னைய நபிமார்கள் மீதும் அவர்களது சமூகத்தவர் மீதும் கடமையாக்கப்பட்டிருந்தது. அந்நபிமார்கள் தொழுகையைக் கடைப்பிடித்து வந்ததோடு தம் சமூகத்தாரையும் தொழுமாறு பணித்தார்கள். நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம், நபி யூசுப் அலைஹிஸ் ஸலாம், நபி மூஸா அலைஹிஸ் ஸலாம், நபி ஹாரூன் அலைஹிஸ் ஸலாம், நபி ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம், நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் ஆகியோர் தமது சமூகத்தினருக்கு தொழுது வருமாறு



கட்டளையிட்டதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. எல்லா நபிமார் களும் தம் சமூகத்தாரிடையே தொழுகையைப் போதித்தமையானது அதன் முக்கியத்துவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் தொழுகை மனிதனது இம்மை, மறுமை வாழ்வின் வெற்றிக்கு ஒரு வழியாகவும் அமைகின்றது. வெற்றி பெற்ற முஃமினின் பண்புகளை அல்குர்ஆன் குறிப்பிடும் போது தொழுகை பற்றியே முதலாவதாகப் பேசுகின்றது.

''முஃமின்கள் வெற்றியடைந்துவிட்டனர். அவர்கள் தங்கள் தொழு கையில் உள்ளச்சமுடையவர்களாக இருப்பார்கள்.'' *(23:1-2)*

''தொழுகை சுவனத்தின் திறவுகோலாகும். யார் காலையும் மாலையும் பள்ளிவாசலுக்கு (தொழுகைக்காக)ச் சென்று வருகின்றாரோ அப் போதெல்லாம் அவருக்கு அல்லாஹ் சுவனத்தில் உயர்ந்த இடத்தைத் தயார்படுத்தி வைக்கிறான்.'' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அடியான் தொழுகையை நிறைவேற்றுவதனால் பல்வேறு நன்மை களை அடைகின்றான். அவனது சிறுபாவங்கள் மன்னிக்கப்படு கின்றன. தொழுகைக்காக எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டும் அவனது பாவங்களை அழித்துவிடுகின்றன. அவன் வுழு செய்யும் போது ஒவ்வோர் உறுப்பிலிருந்தும் அவை செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

''ஐவேளைத் தொழுகைய நிறைவேற்றுவது உங்கள் வீட்டுக்கு முன்னால் ஓடும் நதியிலே நீங்கள் தினமும் ஐந்து முறை குளிப்பது போன்றதாகும்'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும், தொழுகை அடியானை ஒழுக்கம் மிக்கவனாக மாற்று கின்றது. பாவங்கள், மோசமான செயல்களை விட்டும் அவனைத் தடுக்கின்றது. அல்லாஹ், தன்னை நிதமும் அவதானித்துக் கொண்டி ருக்கின்றான் என்ற இறையச்ச உணர்வானது பாவங்களைவிட்டும் தவிர்ந்து வாழ்வதற்கு வழிசெய்கின்றது.

*நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும் பாவங்களிலிருந்தும் மனிதனை விலக்கிவிடுகின்றது. (29:45)*

இவைதவிர தொழுபவருக்கு எப்போதும் மலக்குமார்களின் பிரார்த்தனைகள் கிடைக்கின்றன. தொழுபவர் மன அமைதியைப் பெற்றுக் கொள்கிறார். ஆரோக்கியமும் நேரத்திற்கு இயங்கும் பயிற்சியும் அவருக்குக் கிடைக்கின்றது.

**இவ்வாறு, தொழுகையின் சிறப்புக்களையும் பயன்களையும் கற்றுக் கொண்ட நாம், இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவதற்காக தொழுகையைத் தொடர்ந்து பேணிக் கடைப்பிடிப்போம்.**

**பயிற்சி**

1) தொழுகை பற்றி நீர் கற்ற அல் குர்ஆன் வசனம் ஒன்றையும், ஹதீஸ் ஒன்றையும் தமிழில் தருக.

2) தொழுவதனால் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக.

3) தொழுகை கடமையாக்கப்படிருந்த முன்னைய நபிமார்கள் ஐவரின் பெயர்களை எழுதுக.

# 11 ஸகாத்

ஸகாத் இஸ்லாத்தின் மூன்றாவது கடமையாகும். ஸகாத் என்ற சொல் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி என்ற பொருள்களைத் தரு கின்றது. இதனை நிறைவேற்றுவதன் மூலம் ஸகாத் வழங்குபவரின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைகின்றது. அவரது செல்வம் பாது காப்புப் பெறுகின்றது. அவரது உள்ளம் தூய்மை பெறுகின்றது. இக்கடமையானது ஒவ்வொருவரையும் சமூகத்திலுள்ளோர் மீது அக்கரை கொள்ளச் செய்கின்றது.



அல்லாஹ் தஆலா ஸகாத் பற்றி அல்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளான்.

''எவர்கள் அல்லாஹ் தன் அருளால் தங்களுக்குக் கொடுத்த செல்வங்களில் கஞ்சத்தனம் செய்கின்றார்களோ அதனை அவர்கள் தங்களுக்கு நல்லதென்று எண்ணிவிட வேண்டாம். அது அவர்களுக்குத் தீங்காகவே இருக்கும். கஞ்சத்தனத்தில் சேகரித்த பொருட்கள் மறுமையில் அவர்களது கழுத்தில் அரிகண்டமாக (இரும்பு வளையமாக) மாட்டப் படும்.'' *(3:180)*

அல்லாஹ், அல்குர்ஆனில் அதிகமான இடங்களில் தொழுகையோடு இணைத்து ஸகாத்தைக் குறிப்பிட்டுள்ளான். இது அதன் சிறப்புக்கும், முக்கியத்துவத்துக்கும் எடுத்துக் காட்டாகும். ''நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும் ஸகாத்தைக் கொடுத்தும் வாருங்கள்'' *(2:110)*

ஸகாத் பற்றி ஸுன்னாவும் குறிப்பிட்டுள்ளது. ''ஸகாத்தை நிறைவேற்றுவதன் மூலம் நீங்கள், உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்''. (அபூதாவூத்)

'ஸகாத் வழங்காது தடுத்துக் கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்'. (தபராணி)



**ஸகாத் கடமையை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன. அவற்றில் சிலவற்றை பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.**

1. அல்லாஹ்வின் அருளும், பாதுகாப்பும் கிடைக்கும்.
2. சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைவடையும்.
3. செல்வத்தில் அபிவிருத்தி ஏற்படும்.
4. மனிதர்களிடையே அன்பு, கருணை மலர்ந்து குரோதம், பகைமை நீங்கும்.
5. குற்றச் செயல்கள் குறைவடையும்.
6. மனிதர்கள் விரும்பக் கூடிய அமைதியான ஒரு சமூகம் உருவாகும்.

**எனவே,**

★ **இக் கடமையை முறையாக நிறைவேற்றுவதற்கு உறு துணையாக நிற்போம்.**

★ **ஸகாத் வழங்குபவர்களினதும் பெறுபவர் களதும் வாழ்வு செழிக்கப் பிரார்த்திப்போம்.**

**பயிற்சி**

1) ஸகாத் இஸ்லாத்தின் எத்தனையாம் கடமை?

2) ஸகாத் என்ற சொல்லின் பொருள் யாது?

3) ஸகாத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக.

4) ஸகாத்தை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கும் பயன்களைப் பட்டியற்படுத்திக் காட்டுக.

# 12 நோன்பு

நோன்பு இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் நான்காவதாகும். இது அறபியில் **''அஸ்ஸவ்ம்''** என அழைக்கப்படுகிறது. இக்கடமை இஸ்லாமிய நாட்காட்டியின் 9 ஆம் மாதமான ரமழான் மாத்திலேயே நிறைவேற்றப்படுகிறது.

''ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாயும் நன்மை தீமைகளைப் பிரித்தறியக் கூடியதாகவுமுள்ள அல்குர்ஆன் அருளப்பட்டுள்ளது. ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கவும்'' அல்குர் ஆன் (2:185)

ரமழான் மாதம் நோன்பு நோற்கும் மாதம் என்ற வகையிலும் அல்குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்ற வகையிலும் சிறப்புப் பெறுகின்றது.

இம்மாதம் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். ரமழான் மாதத்தில் எனது உம்மத்திற்கு ஐந்து சிறப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. அவை, எமக்கு முன்னர் எந்த நபிக்கும் கொடுக்கப்படவில்லை.

1. ரமழானில் முதல் இரவில் நோன்பாளிகளை அல்லாஹ் (ரஹ்மத்துடைய பார்வையால்) பார்க்கிறான். (இவ்வாறு) அல்லாஹ் எவரைப் பார்த்துவிடுகிறானோ அவரை அவன் வேதனை செய்ய மாட்டான்.


2. நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை, அல்லாஹ்விடம் கஸ்தூரியைவிட நறுமணம் உடையதாய் இருக்கும்

*3. (ரமழானின்) ஒவ்வொரு இரவிலும் பகலிலும் நோன்பாளிகளுக்காக மலக்குகள் பாவமன்னிப்புக் கோரிக் கொண்டிருக்கிறார்கள்.*

*4. அல்லாஹ் சுவனத்திற்கு கீழ்வருமாறு கட்டளை பிறப்பிக்கின்றான். ''எனது அடியார்களை வரவேற்பதற்காக உன்னை அலங்கரிக்கத் தயாராகுவாயாக! அவர்கள் உலகின் நெருக்கடியிலிருந்து விடுபட்டு எனது இல்லத்தில் - எனது அருளில் சுகம்பெறும் காலம் நெருங்கிவிட்டது.''*

*5. (ரமழானின்) கடைசி இரவு வந்து விட்டால் அல்லாஹ் அவர்கள் அனைவரினதும் பாவங்களை மன்னித்துவிடுகிறான். இச்சந்தர்ப்பத்தில் அங்கிருந்தவர்களில் ஒருவர், அது லைலதுல் கத்ருடைய இரவா என்று நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார். அதற்கு, இல்லை தொழிலாளர்கள் வேலை செய்வார்கள். அவர்கள் வேலையை முடித்துவிட்டால் அவர்களது கூலி அவர்களுக்கு வழங்கப்படுமல்லவா அந்தத் தினம் தான் என்று நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் விடையளித்தார்கள். (பைஹகி)*

மேலும் நோன்பு துறக்கும் போது நோன்பாளிகள் கேட்கும் **துஆக்களை அல்லாஹ் அங்கிகரிக்கின்றான்.**



**நோன்பு நோற்பதனால் எமக்குப் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன.**

- ★ பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன
- ★ உள்ளங்களில் தக்வா எனும் இறையச்சம் அதிகரிக்கின்றது.
- ★ உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கின்றது.
- ★ பொறுமை புலனடக்கம் போன்றவற்றுக்கான பயிற்சி கிடைக்கின்றது.
- ★ ஆயிரம் மாதங்கள் நின்று வணங்குவதற்கு ஈடான இரவை அடைந்து கொள்ளும் பாக்கியம் கிடைக்கின்றது.
- ★ ரய்யான் எனும் வாயிலினால் சுவனம் செல்லும் பாக்கியம் கிடைக்கின்றது.

**எனவே, நோன்பின் சிறப்புக்களை அறிந்து அதன் பயன்களை முழுமையாகப்பெற்று சுவனம் நுழைவதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக.**

**பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) நோன்பு அரபியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?
2) நோன்பு நோற்றவர் எவ்வாயிலினால் சுவர்க்கம் செல்வார்?
3) ரமழான் மாதம் இஸ்லாமிய நாட்காட்டியின் எத்தனையாவது மாதம் ?
4) நோன்பாளிக்காக மலக்குகள் எந்நேரங்களில் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோருகின்றார்கள் ?
5) எந்த நபிக்கும் கொடுக்கப்படாத முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினருக்கு மட்டும் அல்லாஹ் கொடுத்த பாக்கியங்கள் எத்தனை ?

# 13 ஹஜ்ஜின் முக்கியத்துவம்



இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் இறுதியானது ஹஜ் ஆகும். நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்குப் பல்வேறு தியாகங்களைச் செய்தனர். அவற்றை நினைவுகூறக் கூடியதாக ஹஜ் கடமை காணப்படுகின்றது.

போதிய வசதியும் உடல் பலமும் உள்ள முஸ்லிம்கள் இதனை வாழ்வில் ஒருமுறை நிறைவேற்றுவது கட்டாய கடமையாகும். ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்குத் தகுதி - தகைமை பெற்ற ஒருவர் அதனை நிறைவேற்றாமலிருப்பது பாவமாகும்.

இக்கடமையின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தையும் அல்குர்ஆனும் ஸுன்னாவும் குறிப்பிட்டுள்ளன.

*''எவர்கள் அங்கு யாத்திரை செல்லக் கூடிய சக்தியுடையவர்களாக இருக்கிறார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) பைதுல்லாஹ்வை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்விற்கு ஒன்றும் குறைந்துவிடுவதில்லை. ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் படைப் புக்களில் எந்தத் தேவையுமற்றவனாக இருக்கின்றான்.'' (3:97)*



பைதுல்லாஹ்வை சென்றடையப் பயணச் சாதனங்களும் போக்குவரத்து வசதியும் உள்ள ஒருவன் ஹஜ் செய்யாதிருப்பதை இஸ்லாத்தை விட்டும் நீங்குமளவிற்கான குற்றமாக இஸ்லாம் கருதுகின்றது.

*''அல்லாஹ்வுக்காக அங்கு செல்வதற்குச் சக்தியுள்ள மனிதர் மீது கஃபதுல்லாஹ்வை ஹஜ் செய்வது கடமையாகும்.''* (திர்மிதி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

*''பிறருக்குத் துன்பம் செய்யாமலும், பாவம் செய்யாமலும் ஹஜ்ஜை நிறைவேற்றியவர் அன்று பிறந்த பாலகனைப் போன்று (தனது வீடு) திரும்புகிறார்.''* (புஹாரி)

**ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன.**

- ★ அதனை நிறைவேற்றுபவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.
- ★ சுவனம் செல்வதற்கான பாக்கியம் அவருக்குக் கிடைக்கின்றது.
- ★ வறுமையிலிருந்து அவர் பாதுகாக்கப்படுகின்றார்.
- ★ அவர் ஹஜ்ஜுக்காகச் செலவிடும் ஒவ்வொரு திர்ஹத்திற்கும் அல்லாஹ்விடம் எழுநூறு மடங்கு நன்மைகள் கிடைக்கின்றன.
- ★ கஷ்ட துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் பண்பு வளர்கின்றது
- ★ தியாக சிந்தை வளர்க்கப்படுகின்றது.

மேலும் இது உலக முஸ்லிம்களின் சகோதரத்துவத்தையும், சமத் துவத்தையும் வெளிக்காட்டக்கூடிய பிரதான கடமையாகும். அனைத்து ஹாஜிகளும் ஒரே திசையில் ஒரே மொழியில் ஒரே விதமான ஆடையில் **லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்** என முழங்குகின்றனர். தம்மைப் படைத்த இரட்சகனைத் துதிக்கின்றனர், அவனைப் பெருமைப் படுத்துகின்றனர். இங்கு இன, மொழி, பிரதேச வேறுபாடு எதனையுமே காண்பதற்கில்லை.

எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்ற உணர்வே மேலோங்கி நிற்கிறது.

இவ்வாறு உலக முஸ்லிம்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் ஒரே இடத்தில் ஒன்று கூடுவதன் மூலம் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்கின்றனர். அங்கு சமூக விவகாரங்கள் குறித்து கருத்துப் பரிமாறவும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஒவ்வொரு முஸ்லிமும் உலகில் எந்த மூளையில் வாழ்ந்தாலும் நான் தனிமைப்பட்டவனல்லன் சர்வ தேச முஸ்லிம் உம்மத்தின் ஓர் அங்கத்தவன் என்ற உணர்வையும் இக்கடமை ஏற்படுத்துகின்றது.

**எனவே ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் எமக்கும் கிடைக்கவேண்டுமெனவும் இதன் மூலம் அல்லாஹ்வின் அருளைப் பெறவேண்டுமெனவும் பிரார்த்திப்போம்.**

**பயிற்சி**

**சரி பிழை கூறுக.**

1. ஹஜ் இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகும். ( )
2. ஒரு முஸ்லிம் வசதி கிடைக்கும் ஒவ்வொரு முறையும் ஹஜ் செய்வது கடமையாகும். ( )
3. ஹஜ் கடமையை முஸ்லிமான ஒருவர் எந்த இடத்திலும் நிறை வேற்றலாம். ( )
4. இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களதும் அவர்களது குடும்பத்தவர்களதும் தியாக வரலாற்றை ஹஜ் உணர்த்துகின்றது. ( )
5. வசதி பெற்றும் ஹஜ்ஜை நிறைவேற்றாதிருப்பது பாவமாகும். ( )
6. ஹஜ்ஜை நிறைவேற்ற பண வசதி மட்டும் போதுமானது. ( )
7. அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்ஜுக்குரிய கூலி சுவனமாகும். ( )
8. ஹஜ் கடமையை எப்போதும் நிறைவேற்ற முடியும். ( )

# 14 ஸுன்னத் தொழுகை



அல்லாஹ் ஐந்து நேரத் தொழுகையை எங்கள் மீது கட்டாயக் கடமையாக்கியுள்ளான். அவை தவிர வேறு சில தொழுகைகளும் காணப்படுகின்றன. அவற்றுள் ஸுன்னத்தான தொழுகைகள் பற்றித் தெரிந்து கொள்வோம். அவற்றை நிறைவேற்றுவதனால் எமது பர்ளுத் தொழுகையில் ஏற்பட்ட தவறுகள் நிவர்த்திக்கப்படுகின்றன. மேலும் அதிகமான நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றை நிறைவேற்றுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தூண்டி யுள்ளார்கள்.

''ஓர் அடியானிடம் கியாமத் நாளில் அவனது நற்செயல்களில் முதன் முதலில் தொழுகை பற்றியே விசாரிக்கப்படும். அது சீரடைந்து விட்டால் நிச்சயமாக அவன் வெற்றி பெற்றுவிட்டான். ஆனால், அது சீர் கெட்டு விட்டால் நிச்சயம் அவன் நஷ்டமடைந்து விடுவான். ஆனால் அவனின் பர்ளுகளில் குறைவு ஏற்பட்டுவிட்டால் ''என் அடியானுக்கு ஸுன்னத்தான தொழுகைகள் உண்டா எனக் கவனித்துப் பாருங்கள்'' என்று அல்லாஹ் மலக்குகளுக்குக் கூறுவான். உடனே பர்ளுகளின் குறைவுகள் ஸுன்னத்துக்களால் நிரப்பப்படும். இதே போல் அவனது ஏனைய நற்கிரியைகளும் நிரப்பப்படும்'' என நபி அவர்கள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிட்டார்கள் (திர்மிதி)



ஒவ்வொரு ஸுன்னத்தான தொழுகைக்கும் தனித்தனிச் சிறப்புக்கள் காணப்படுகின்றன. ''ஆதமின் பிள்ளைகளே பகலின் ஆரம்ப நேரத்தில் நான்கு ரக்அத்துக்கள் தொழ இயலாதவர்களாக இருக்க வேண்டாம். ஏனெனில் அதுவே அன்றைய தினத்தில் உமக்குப் போதுமானதாக இருக்கும்'' (ஹாகிம்)

''இரவில் நின்று வணங்குங்கள். அது உங்களுக்கு முன்பிருந்த நல்லடியார்களது பழக்கமாகும். அது உங்களது இரட்சகனிடம் உங்களை நெருங்கச் செய்யும். உங்களது பாவங்களை அழித்துவிடும். தீமைகளை விட்டும் உங்களைக் காத்துவிடும். உங்கள் உடம்பிலிருந்து நோய்களை நீக்கி விடும் (திர்மிதி)

''எவர் இரவிலும் பகலிலும் (கடமையான தொழுகைக்கு முன்பின் உள்ள) பன்னிரண்டு ரக்அத்துக்கள் தொழுகிறாரோ அதன் மூலம் அவருக்குச் சுவனத்தில் ஒரு மாளிகை கட்டப் படுகிறது. (முஸ்லிம்)

ஸுன்னத்தான தொழுகை களின் சிறப்புக்களைத் தெரிந்து கொண்ட நாம் அவற்றுள் சிலவற்றின் வகைகளையும் அறிந்து கொள்வோம்.

- ★ ஐங்கால தொழுகையின் முன் பின் உள்ள ஸுன்னத்தான தொழுகைகள்
- ★ தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகை
- ★ ழுஹாத் தொழுகை
- ★ தஹஜ்ஜுத் தொழுகை
- ★ வித்ர் தொழுகை
- ★ தராவீஹ் தொழுகை
- ★ பெருநாள் தொழுகை
- ★ கிரகணத் தொழுகை
- ★ தஸ்பீஹ் தொழுகை

**எனவே**

**நாம் பர்ழான, ஐங்காலத் தொழுகைகளைத் தவறாது நிறைவேற்றுவோம்.**

**மேலும் ஸுன்னத்தான தொழுகைகளை இயன்றவரை நிறைவேற்றி அல்லாஹ்வின் அருளையும் அன்பையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.**

**செயற்பாடு**

1. பின்வரும் தொழுகைகளில் பர்ளானவை ஸுன்னத்தானவை யாவை என வேறுபடுத்திக் காட்டுக.

- ★ ஜனாஸாத் தொழுகை
- ★ வித்ர் தொழுகை
- ★ பஜ்ர் தொழுகை
- ★ தராவீஹ் தொழுகை
- ★ ழுஹாத் தொழுகை
- ★ தஹஜ்ஜுத் தொழுகை
- ★ ழுஹர் தொழுகை

2. ஸுன்னததான தொழுகைகளினால் கிடைக்கக் கூடிய பயன்கள் மூன்று தருக

# 15 சுற்றாடலைப் பேணுவோம்




நாம் வாழும் இப்பூமி அல்லாஹ்வின் அருளாகும். அல்லாஹ் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை இப்பூமிக்கு அனுப்பத் தயாரான போது, மனித இனம் உயிர் வாழத் தேவையான அனைத்து உயிரினங்களையும், பௌதிகப் பொருட்களையும் அதில் உண்டாக்கினான்.

சூழல் எனும்போது அது நாம் வாழும் பூமியுட்பட அதில் எமக்காக அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட உயிரினங்கள், நிலம், நீர், வளி போன்ற அத்தியவசியமான பௌதிக பொருட்கள் அனைத்தையும் குறித்து நிற்கின்றது.

எமது சூழலையும், சூழலில் உள்ளவற்றையும் பற்றி அல்லாஹ் அல்குர் ஆனில் பல இடங்களில் குறிப்பிட்டுக் கூறுகின்றான்.

பரந்து விரிந்த வானம், நாம் வாழும் பூமி, அதில் பறந்து செல்லும் பறவைகள், விலங்குகள், தேனீக்கள், உயிரினங்கள் பற்றியெல்லாம் அல்குர்ஆன் கூறுகின்றது.

ஓடும் நதி, வீசும் காற்று, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் என்று அல் குர்ஆன் தரும் எல்லா உதாரணங்களையும் நோக்குங்கள். அவை எமது சுற்றாடலைப் பற்றியும் அதில் வாழும் மனிதன் அதிலிருந்து பல படிப்பினைகள் பெறுவது பற்றியும் எடுத்தியம்புகின்றன. அது மட்டுமின்றி அவற்றைப் பேணிப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிடுகின்றன.



எனவே, நாம் வாழும் பூமியை வளப்படுத்துவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். ''ஈமானின் கிளைகள் எழுபதுக்கும் மேற்பட்டதாகும். அதில் உயர்ந்தது லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவாகும். குறைந்தது பாதையில் தீங்கு விளைவிக்கும் பொருளை அகற்றுவதாகும்.''(புகாரி, முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள். அதுமட்டுமன்றி ''சுத்தம் ஈமானின் பாதியாகும்''.(முஸ்லிம்) என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஓர் உண்மை முஸ்லிம் அவன் வாழும் சூழலை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதில் கவனம் செலுத்துவான்.

**சுற்றாடலை அழகுபடுத்தும் போது கவனிக்க வேண்டியவை.**

1) சுற்றாடலுக்கு அழகு சேர்க்கும் மரம் செடி கொடிகளை நடுவது,
2) சுற்றாடலை ஒவ்வொரு நாளும் சுத்தப்படுத்துவது.
3) சுற்றாடலில் சேரும் கழிவுகளைச் சரியான முறையில் அகற்றுவது,
4) நிலம், நீர், வளி, போன்றவற்றை மாசுபடாமல் பாதுகாப்பது,
5) தாவரங்கள், பறவைகள், விலங்குகளுக்குத் தீங்கு ஏற்படுத்தக் கூடிய நச்சுக்களைச் சூழலில் சேரவிடாது தவிர்ப்பது.

இவ்வாறு சுற்றாடலின் அழகையும் தூய்மையையும் பேணும் போதுதான் நாம் அல்லாஹ்வின் நேசத்துக்குரியவர்களாக மாற முடியும். இதனைக் கீழ்வரும் ஹதீஸ்கள் எடுத்துக் காட்டுகின்றன.

''அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே விரும்புகின்றான். அல்லாஹ் தூய்மையானவன்; அவன் தூய்மையை விரும்புகின்றான்.'' (முஸ்லிம்)

சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் இன்று மனித இனத்தை ஆட்டிப்படைக்கும் ஆட்கொல்லி நோய்களான டெங்கு, மலேரியா,

வயிற்றோட்டம், வாந்திபேதி, தைபோயிற்று போன்ற தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதன் மூலம் அழிந்து செல்லும் பல வகையான உயிரினங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்தோடு அடிக்கடி ஏற்படக்கூடிய வரட்சி, பூகம்பம் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, போன்ற இயற்கை அனர்த்தங்களில் இருந்தும் எமக்குப் பாதுகாப்பும் கிடைக்கும்.

சுற்றாடல் சுத்தம் பேணி வளமான ஒரு சூழலை உருவாக்கிக் கொள்வது முஸ்லிமான ஆண், பெண் அனைவர் மீதும் கட்டாய கடமையாகும்.

**எனவே அவ்வாறானதொரு சுத்தமான, பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்வோம்.**

**பயிற்சி**

1. சுற்றாடலை அழகுபடுத்தும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் நான்கினைத் தருக?
2. சுற்றாடல் மாசுபடுவதால் ஏற்படும் தீமைகள் நான்கு தருக?

# 16 கழிவகற்றல்

'ரஹ்மத் புரம்' இயற்கையான ஓர் அழகிய இரம்யமான கிராமம். எனினும் அக்கிராமத்தவர்களுக்கு அது புரியாமல் இருந்தது. அவர்களின் பழக்கவழக்கங்கள் அந்தக் கிராமத்தின் அழகைக் கெடுத்தன. காற்றையும் தண்ணீரையும் மாசுபடுத்தின. ஊர் மக்கள் துர்வாடை கொண்ட காற்றையே சுவாசித்துக் கொண்டிருந்தனர். ஆற்றுநீர் அசுத்தமடைந்ததால் அவர்களால் அதைப் பயன்படுத்த முடியாமல் இருந்தது. அக்கிராமத்தைச் சேர்ந்த சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி டெங்கு, மலேரியா எனப் பல்வேறு தொற்று நோய்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.



இந்நிலையில் ரஹ்மத் புரப் பள்ளிவாசலில் கடமையாற்றுவதற்காகப் புதிதாக ஓர் இமாம் வந்தார். அவ்வூரின் நிலை கண்டு கவலைப்பட்டார். ஏனெனில் மக்கள் ஊரின் முக்கியமான சந்தியில் கழிவுகளைக் கொட்டிக் கொண்டிருந்தனர். சிலர் கழிவுகளைப் பொலிதீன் உறைகளில் போட்டு வீதியோரங்களில் எறிந்துவிட்டுச் செல்கின்றனர். நாய்களும் காகங்களும் அவற்றை இழுத்துத் தெருவோரங்களை அசுத்தப்படுத்திக் கொண்டிருந்தன. பாதசாரிகளும் பயணிகளும் இதனால் பெரும் துன்பங்களுக்கு ஆளாகினர். இக்கழிவுகளினால் ஊர் முழுவதும் துர்வாடை வீசிக் கொண்டிருந்தது.



மேலும் அவ்வூர் மக்கள் கழிவு நீரை எவ்விதத் தயக்கமும் இன்றி ஆற்றிற்கே திறந்து விடுபவர்களாக இருந்தனர். இதனால் ஆற்று நீரும் சீர்கெட்டது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பொலிதீன் உறைகளும் உடைந்த பிளாஸ்டிக் பொருட்களும் தகரப் பேணிகளும் சிரட்டைகளும் வீசப்பட்டிருந்தன.

ஊர் மக்கள் பகலில் ஈக்களின் தொல்லையினாலும் இரவில் நுளம்புத் தொல்லையினாலும் அவதிப் பட்டுக் கொண்டிருந்தனர்.

இவற்றையெல்லாம் அவதானித்த இமாம் அவர்கள், இந்த ஊரில் தொடர்ந்து சேவையாற்றுவதா அல்லது வேறோர் ஊருக்குச் செல்வதா எனச் சிந்திக்கலானார். நான் இங்கிருந்து செல்வதை விட இந்த ஊரை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வருவதே சிறந்த சேவை எனக் கருதினார்.

மறுநாள் வெள்ளிக் கிழமை குத்பாவில் இமாம் அவர்கள் வாழுமிடத்தைச் சுத்தமாக வைப்பதன் அவசியம் பற்றி விசேட சொற்பொழிவை நிகழ்த்தினார். அம்மக்கள் கழிவுகளை அகற்றுவதற்குக்

கையாண்ட வழிமுறைகள் அல்லாஹ்வுக்கு வெறுப்பானவை என்பதை அழகிய முறையில் சுட்டிக் காட்டினார். இந்த ஊருக்குள் மலக்குகள் வர வேண்டுமானால் இந்த ஊரைச் சுத்தமாக்க வேண்டும் என்றார். அதற்கு ஆதாரமாக அல்குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் முன் வைத்தார்.

★ *சுத்தம் ஈமானின் பாதி. (ஹதீஸ்)*

★ *வீதியில் உள்ள நோவினை தரும் கல்லையும் முள்ளையும் அகற்றுவதும் ஈமானைச் சார்ந்தது. (ஹதீஸ்)*

★ *அல்லாஹ் தவ்பாக் கேட்போரையும் சுத்தமானவர்களையுமே விரும்புகிறான். (அல்குர்ஆன்)*

இவற்றை செவிமடுத்த அந்த மக்கள் உணர்வு பெற்றார்கள். சிந்திக்கத் தொடங்கினார்கள். ஊரில் உள்ள சில வாலிபர்களும் முக்கியஸ்தர்களும் இமாமைச் சந்தித்து அவருடன் கலந்தாலோசி த்தனர். இறுதியில் இரண்டு நாள் சிரம தானம் ஒன்றினை ஒழுங்கு செய்து ஊரைச் சுத்தம் செய்ய முடிவு செய்தனர். அதற்கான நாட்களையும் தீர்மானித்தனர்.

சிரமதானத்தில் ஊர் மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் என எல்லோரும் பங்களிப்புச் செய்தனர். கலந்து கொள்ள முடியாதவர்கள் தமக்காக வேலை செய்ய ஒருவரைக் கூலிக்கமர்த்தினர்.

சிரமதானத்தில், பெரியவர்கள் ஆங்காங்கே பல இடங்களில் குழி களை வெட்டினர். பின்னர் சந்தியில் குவிக்கப்பட்டிருந்த அழுக்கு களைக் கொண்டுவந்து குழிகளில் புதைத்தனர். பெண்களில் சிலர் அங்கு கனிதரும் மரங்களையும், பூஞ்செடி கொடிகளையும் நிழல் தரும் மரங்களையும் நட்டினர்.

சிறுவர்கள் சிரட்டைகளையும் பிளாஸ்டிக் பொருட்களையும் தகரப் பேணிகளையும் சேகரித்து வேறு வேறாகக் குவித்தனர்.

பெண்களில் சிலர் குவியல் களாக சேகரிக்கப்பட்டிருந்த எரியக்கூடிய பொருட்களைப் பகுதி பகுதியாக சிறியளவில் தீ யிட்டுக் கொழுத்தினர். ஆண் களில் இன்னொரு சாரார் ஆற்றுக்குச் செல்லும் பாதையைச் சுத்தம் செய்தனர்.



ஆற்றோரங்களில் போடப்பட்டிருந்த கழிவுகளை அகற்றினர். வீடுகளின் கழிவு நீரை ஆற்றில் கலக்க விடுபவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினர். இவ்வாறு முதல் நாள் சிரமதானப் பணிகள் முடிவுற்றன.

இரண்டாம் நாள், தமது வீட்டுச் சுற்றுப் புறங்களைச் சுத்தம் செய்வதிலேயே பெரும்பாலானோர் ஈடுபட்டனர். வெளிப்புறக் குப்பைகளையும் வீட்டுக்குள் சேரும் பயனற்ற பொருட்களையும் தத்தமது வீடுகளுக்கு அருகில் குவித்து சிலவற்றுக்குத் தீவைத்தனர். கழிவு நீரை விடுவதற்காக சிலர் தமது வீட்டு எல்லைக்குள் குழிகளை வெட்டினர். இன்னும் சிலர் கழிவு நீரைப் பயன்படுத்துவதற்காக கான்களை வெட்டி வீட்டுத் தோட்டத்திற்குள் அவற்றைத் திருப்பிவிட்டனர். இவ்வாறு இரண்டாம் நாள் சிரமதானப் பணிகளும் சிறப்பாக முடிவுற்றன.

பள்ளிவாசல் இமாமவர்கள், ஒவ்வொரு வீட்டிலும் சேரும் கழிவு களை அகற்றுவதற்கு ஒழுங்கு முறையொன்றை சொல்லிக் கொடுத் தார். அதன் படி ஒவ்வொரு வீட்டு முற்றத்திலும் இரண்டு தொட்டிகள் வைக்கப்பட்டன. ஒரு தொட்டியில் உக்கக் கூடிய கழிவுகளும் அடுத்த தொட்டியில் உக்காத கழிவுகளும் போடப் பட்டன. தொட்டி நிறையும் போது உக்கும் பொருட்கள் வயல் ஓரங்களில் தோண்டப்பட்டிருந்த குழிகளில் போடப்பட்டன. உக்காத பிளாஸ்டிக், பொலிதீன் பொருட் கள் அவற்றை சேகரிக்க வருவோரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ரஹ்மத் புரம் புதுப்பொலிவு பெற்றது. மக்களது அபிமானம் பெற்ற தூய்மையான கிராமமாகக் காட்சியளித்தது. வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளை ஒதுக்கிக் கிராமத்தைத் தூய்மைப்படுத்தும் பணியை மக்கள் வழக்கமாக்கிக் கொண்டனர்.

சில வருடங்கள் கழிந்தன நட்டிய மரங்கள் காய்த்துக் கனிதந்து கொண்டிருந்தன. பூஞ்செடிகள் பூத்துக்குலுங்கின. அவ்வூர் நிழல் மிக்கதாக மாறியது. ஊர்மக்கள் இமாமுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டனர். தொழுகைக்காக அதான் கூறப்படும் போது பள்ளிவாசலுக்குச் சென்று ஜமாஅத்தாகத் தொழுவதில் சந்தோசமடைந்தனர்.

ரஹ்மத் புறம் தற்போது அல்லாஹ்வின் ரஹ்மத்தை(அருளை)ப் பெற்றதொரு கிராமமாகக் காட்சியளித்தது.

## பயிற்சி

**சரி பிழை கூறுக**

1. ''சுத்தம் ஈமானின் பாதி'' என்று அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ( )
2. ஊர் அசுத்தமடைவதற்கு ஊர் மக்களே காரணமாவர் ( )
3. ஊருக்குள் பரக்கத்துக்குரிய மலக்குகள் வர, ஊர் சுத்தமாக இருக்க வேண்டும். ( )
4. சிரமதானப் பணிகளில் ஈடுபடுவதால் எமது நேரம் வீணாகின்றது. ( )
5. கழிவுப் பொருட்களால் எப்பயனையும் அடைய முடியாது. ( )

## செயற்பாடு

1. ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் வகுப்பினுள்ளும் வெளியிலும் சிரமதானம் ஒன்றை மேற்கொள்க.

# 17 நேரம் பேணல்



நேரத்தினதும் காலத்தினதும் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே ஸூரதுல் அஸ்ர் என்ற பாடத்தில் நீங்கள் கற்றிருக்கின்றீர்களல்லவா?

மனித வாழ்வு நேரத்தை உரியமுறையில் பயன்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. ஒருவர் அதனைச் சிறப்பாகப் பயன்படுத்தும் போது அவர் வாழ்வில் வெற்றி பெறுகின்றார். அதனை உரிய முறையில் பயன்படுத்தாதபோது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார். வெற்றி கிட்டுவதும் தோல்வி அடைவதும் நேரத்தைப் பேணு வதிலேயே தங்கியுள்ளது.

இதனாலேயே, இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். 'ஒரு நாள் புலர்ந்து, அந்நாளில் எனது செயற்பாடுகளில் சிறிதேனும் முன்னேற்றம் காணாத நிலையில் எனது ஆயுள் குறைந்து விடுமாயின் அதற்காக நான் கவலைப்படுவது போன்று வேறு எதற்காகவும் கவலைப்பட்டதில்லை.'



நேரத்திற்கு இயங்குவது வெற்றி பெற்ற மனிதர்களது மிக முக்கிய மானதொரு பண்பாகும். நேரத்திற்கு இயங்கும் பண்பை இஸ்லாமியக் கடமைகள் மேலும் ஊக்குவிப்பதாக உள்ளன. தொழுகை தொடர்பாக அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. ''நிச்சயமாக தொழுகை முஃமின்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்.'' *(4:103)*

அதிகாலை எழுந்து ஸுபஹ் தொழுகையை நிறைவேற்றி உற்சாக மாக அன்றைய கடமைகளை ஆரம்பிக்க முடியும். அதிகாலையில் எழுவது அருள்பாலிக்கப்பட்டுள்ளது. ''அல்லாஹ்வே, எனது உம்மத்தி னரில் அதிகாலையிலேயே எழுபவர்களுக்கு நீ அருள்பாலிப்பாயாக'' (அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தித்தார்கள்.



ஒருவர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டும். தொழுகையை உரிய நேரத்தில் தொழ வேண்டும். படிப்பதற்குரிய நேரத்தில் படிக்க வேண்டும். அல் குர்ஆனை உரிய காலத்தில் கற்றுக்கொள்ள வேண்டும். விளையாடு வதற்குரிய நேரத்தில் விளையாட வேண்டும். நித்திரைக்குரிய நேரத்தில் நித்திரை செய்ய வேண்டும். ஒவ்வொரு வேலையையும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றப் பழகிக்கொள்வது வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும்.





**நேரத்திற்கு இயங்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாம் பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க முடியும் என முன்னோர்கள் கற்றுத் தந்துள்ளார்கள்.**

★ நமது கடமைகளையும் அவற்றை நிறைவேற்ற வேண்டிய நேரத்தையும் திட்டமிட்டுக் கொள்ளல்,

★ தினமும் நிறைவேற்ற வேண்டிய விடயங்களைத் திட்டமிட்டுக் கொள்ளல்,

★ ஒவ்வொரு செயலையும் அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றல்,

★ ஐவேளைத் தொழுகையையும் அதற்குரிய நேரத்தின் ஆரம் பத்திலேயே ஜமாஅத்துடன் நிறைவேற்றல்,

★ அதிகாலையில் எழுந்து தஹஜ்ஜு , ஸுப்ஹுத் தொழுகைகளை நிறைவேற்றல்.

★ பிறகு செய்யலாம் என்று எதனையும் பிற்போடாதிருத்தல்,

★ அடிக்கடி மறந்து விடும் செயற்பாடுகளை எழுதி வைத்துக் கொள்ளல்,

**எனவே நேரத்தை உரிய வகையில் பேணி நாமும் வாழ்வில் வெற்றி பெறுவோம்.**

**பயிற்சி**

*1) நேரத்தின் முக்கியத்துவம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.*

# 18 நன்மையை ஏவுவோம் தீமையைத் தடுப்போம்



நாம் ஒவ்வொருவரும் நல்ல விடயங்களையே விரும்புகின்றோம். தீய காரியங்களை வெறுக்கின்றோம். அல்லாஹ் நன்மையை ஏவுகின்றான். தீமையைத் தடுக்கின்றான். நன்மைக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், தீயவற்றை ஒதுக்கி வாழ்வதும் மனிதனின் சிறந்த பண்பாகும். ஏனெனில் நன்மை மனிதனுக்கு நல்லதாக இருக்கும், தீமை மனிதனுக்குக் கெடுதியாக இருக்கும். உலகில் நன்மை பெருக வேண்டும். தீமை ஒழிய வேண்டுமென்பதே எல்லா மனிதர்களதும் எதிர்பார்ப்புமாகும். அல்லாஹ்வும் அதனையே விரும்புகிறான்.

உலகில் தோன்றிய எல்லா நபிமார்களும் நன்மையை ஏவினார்கள். தீமையைத் தடுத்தார்கள், ஏவப்பட்டவை ஹலால் எனப்படும், விலக்கப்பட்டவை ஹராம் எனப்படும்.

உண்மை பேசுதல், ஒழுங்குகளைப் பேணுதல், அமைதியை ஏற்படுத்தல், நேர்மையாக நடத்தல், நீதியை நிலை நாட்டுதல் போன்றன நற்செயல்களில் சிலவாகும். பொய் பேசுதல், ஒழுங்கு முறைகளை

உதாசீனம் செய்தல், சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல், குழப்பங்களைத் தூண்டிவிடுதல், அநியாயத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்றன தீய செயல்களாகும்.

மனிதன் நன்மையை விரும்புவதற்கும், தீமையை வெறுப்பதற்கும் காரணம் உண்டு. உலகில் அமைதி நிலவ வேண்டுமாயின் நன்மை பெருக வேண்டும். தீமை ஒழிய வேண்டும். அறியாமை, பேராசை, கூடாநட்பு, தீய சூழல் போன்றன மனிதனைத் தீமையின் பக்கம் இட்டுச் செல்கின்றன. அவற்றை ஒழிப்பதற்குப் போதுமான வழிகாட்டல்களை இஸ்லாம் முன்வைத்ததுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்: ''நீங்கள் நல்லவற்றை ஏவுகிறீர்கள், தீயவற்றைத் தடுக்கின்றீர்கள். அல்லாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள். ஆதலால் நீங்கள் மனித சமுதாயத்தில் சிறந்த சமூகமாக உள்ளீர்கள். *(3:110)*

இங்கு நன்மையை ஏவுவதும், தீமையைத் தடுப்பதும் சிறந்த சமூகத்தின் நடைமுறையாக எடுத்துக் காட்டப்படுகின்றது. ''உங்களில் எவரேனும் தீயதைக் கண்டால் அதனைக் கையால் தடுக்கவும். அதற்குச் சக்தி பெறாவிட்டால் நாவினால் தடுக்கவும். அதற்கும் சக்தி பெறாவிட்டால் மனதால் வெறுத்து ஒதுங்கிக் கொள்ளவும் என''(முஸ்லிம்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

நாம் தீமையை இலகுவில் உணரலாம். அது இடம்பெறும் போது மனித உள்ளம் அவனை உறுத்தும். நாம் செய்யும் தவறை, பாவத்தை, தீமையை பிறர் கண்டு கொள்ள முடியாதவாறு மறைக்கும். தீமை என்பது மார்க்கத்துக்கும், சமூகத்துக்கும் எதிரான செயற்பாடாகும்.

நன்மை செய்வதை இஸ்லாம் கட்டாயப்படுத்துகிறது. அதனைச் செய்வதால் உள்ளத்திற்கு ஆறுதல் கிடைக்கிறது. அல்லாஹ்வின் நேசமும், கூலியும் கிடைக்கின்றன. நாம் செய்யும் நன்மையான செயல்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் திருப்தியடைவார்கள். தாமும் அவ்வாறு செய்ய வேண்டுமெனத் தூண்டப்படுவார்கள்.

நல்லதைச் செய்வதும், தீயதைச் செய்யாதிருப்பதும் முஸ்லிமின் மீதுள்ள பாரிய பொறுப்பாகும். இதற்கமைய, இப்பணியை ஒவ்வொரு முஸ்லிமும் தனியாகவும், கூட்டாகவும் முன்னெடுப்பது கட்டாயமானதாகும்.

தீமை என்பது அல்லாஹ்வினால் தடுக்கப்பட்டதாகவும், வெறுக்கத் தக்கதாகவும், இழிவானதாகவும், அல்லாஹ்வின் கோபத்துக்கு உட்படுத்தப்படுவதாகவும் அமைகின்றது. ஆதலால் தீமை நிகழும் இடத்துக்குச் செல்வதோ, அவற்றை ஊக்குவிப்பதோ, அதனைச் செய்வதோ தவிர்க்கப்படவேண்டும். தீயன செய்பவரோடு சேர்ந்து நடக்கவோ, நட்புக் கொள்ளவோ, அவர்கள் செய்யும் தீமைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவோ கூடாது. முடியுமானால் அத்தீமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான வழிமுறைகளைக் கையாள்வதே சிறந்ததாகும்.

அல் குர்ஆனும், ஸுன்னாவும் நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும்படி மட்டும் கூறவில்லை. நன்மை எது, தீமை எது என்பதை எடுத்துக்காட்டியுமுள்ளன.

**எனவே**

- ★ **நாம் நன்மையைத் தேடி விருப்பத் தோடு செய்து வருவோம்.**
- ★ **மற்றவர்களுக்கும் ஏவி வருவோம்.**
- ★ **தீமைகளை இனங்கண்டு அவற்றை வெறுத்து ஒதுக்குவோம்.**
- ★ **மற்றவர்களும் செய்யாமல் தடுத்து வருவோம்.**

**பயிற்சி**

***1. பின்வருவனவற்றை பொருத்தமான விதத்தில் தொடர்புபடுத்துக.***

| அ | ஆ |
|---|---|
| I) அல்லாஹ் நன்மையை ஏவுகின்றான் | தடுக்கப்பட வேண்டும் |
| II) நன்மையை செய்தும், செய் வித்தும் வரவேண்டும் | நன்மையை ஏவியும் தீமையை தடுத்தும் வருவதாகும் |
| III) குழப்பங்களை தூண்டி விடுதல் | தீமையைத் தடுக்கிறான் |
| IV) சிறந்த சமுதாயம் என்பதற்கு ஆதாரம் | தீமையைச் செய்யாமலும் தடுத்ததும் வரவேண்டும் |

*2. மக்கள் செய்ய வேண்டிய நன்மைகள் ஐந்தைக் குறிப்பிடுக.*

*3. மக்களிடம் தடுக்கப்பட வேண்டிய தீமைகள் ஐந்தைக் குறிப்பிடுக.*

*4. தீமையைக் கண்டால் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென ஹதீஸ் குறிப்பிடுகின்றது?*

*5. தீமையைத் தடுப்பதில் நீர் எவ்வாறு பங்காற்ற முடியும் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.*

# 19 நற்கருமங்களுக்கு ஒத்துழைப்போம்

அது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இளைஞராக இருந்த காலம். அறபு நாட்டில் ஜாஹிலிய்யத் எனும் அறியாமை நிறைந் திருந்தது. கோத்திர உணர்வு மேலோங்கி இருந்தது.

ஒரு முறை ஜுபைத் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர், வியாபாரத் துக்காக மக்கா நகர் வந்தார். ஸஹ்ம் கோத்திரத்தைச் சேர்ந்த ஆஸ் பின் வாஇழ் என்பவர் அவரிடம் பண்டங்களை வாங்கினார். எனினும் அதற்கான கிரயத்தைக் கொடுக்க மறுத்துவிட்டார். கவலையுற்ற அம்மனிதர் அன்றைய வழக்கப்படி நேசக் கோத்திரங்களிடம் இவ்அநீ திக்கு எதிராக உதவி கோரினார். அவர்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. வேறு வழியின்றி மக்காவிலுள்ள அபீகுபைஸ் மலையில் ஏறினார். மக்களைக் கூவி அழைத்தார். தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை உரத்த குரலில் முன்வைத்தார்.

அந்தக் குரலைச் செவிமடுத்த ஸுபைர் இப்னு அப்துல் முத்தலிப் என்ற குறைஷிப் பிரமுகர் ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என விசாரித்தார். அப்துல்லா பின் ஜுத்ஆன் என்ற முதுமையும், மதிப்பும் மிகுந்த பிரமுகரின் வீட்டில் குறைஷியரை ஒன்று கூட்டினார்.

அவர்கள் **மக்கா வாசியோ, வெளியாரோ யாராயினும் அநீதிக்கு உட்படுத்தப்பட்டால் அவருக்கு உதவி செய்து நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்** என்ற ஒரு தீர்மானத்தை எடுத்தனர். ஓர் உடன் படிக்கை செய்து கொண்டனர். இது **ஹில்புல் புழூல்** எனப்படுகின்றது.

மக்கா வாசிகளோ, அயலாரோ, சுதந்திரமானவர்களோ, அடிமை களோ, மக்காவிலோ, அதன் சுற்றுவட்டாரத்திலோ, துன்புறுத்தப் படாமலும், அநியாயத்துக்குட்படாமலும் இருப்பதற்கான ஒழுங்கு களைச் செய்வதும், அநியாயத்துக்கு உட்பட்டவர்களுக்கு உதவி செய்வதும் இவ்வுடன்படிக்கையின் சாராம்சமாகும்.

இந்த நிகழ்வில், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது பெரிய தந்தையுடனும், அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது தந்தையுடனும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''அப்துல்லா பின் ஜுத்ஆனின் வீட்டில் இடம்பெற்ற அந்த உடன் பாட்டில் நானும் கலந்து கொண்டேன். எனக்கு செந்நிற ஒட்டகங்கள் கிடைப்பதை விட அந்த இணக்கத்தில் கலந்து கொண்டதைப் பெருமை யாகக் கருதுகிறேன்''

இந் நிகழ்வு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இளமைக் காலத்தில் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கான சிறந்ததொரு சான்றாகும்.

''நன்மைக்கும் பயபக்திக்கும் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவி யாக இருங்கள். பாவத்திற்கும், அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக் கொருவர் உதவியாக இருக்க வேண்டாம்'' *(5:02)* என்ற அல்குர்ஆன் வசனம், சமூகத்தில் நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சமூகத்தில் நல்லவர்களும் இருப்பர். கொடியவர்களும் இருப்பர். நன்மைக்கு ஒத்துழைப்பவர்களும், தீமைக்கு இடம் கொடுப்பவர்களும் இருப்பர். இந்நிலையில் நாம் நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தீய காரியங்கள் இடம்பெறுவதைத் தடுக்க வேண்டும். இந்தப் பணியைத்தான் அன்றைய குறைஷியர் செய்தி ருக்கிறார்கள். அதன் ஒரு கட்டமாகவே மேலே குறிப்பிட்ட நிகழ்வு அமைந்திருந்தது.

உலகில் மனிதன் நலமோடு வாழ வேண்டுமாயின் நன்மைகள் பெருக வேண்டும். தீமைகள் ஒழிய வேண்டும். நன்மைகள் பெருகு வதற்கும் தீமைகள் ஒழிவதற்கும் நாம் தனியாகவும் கூட்டாகவும் செயற்பட வேண்டும். இது வெறுமனே ஒரு போதனை மட்டுமல்ல செயற்பாடுமாகும்.

முதலில் இதனைத் தமது வீடுகளிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். படிப்படியாக, உறவினர், நண்பர், அயலவர், என்ற வட்டத்தில் நகர்த்த வேண்டும். வகுப்பறைகளிலும் படிப்படியாக நடைமுறைப்படுத்த முடியும்.



**எனவே**

- ★ **நல்ல காரியங்களில் நாமும் ஈடுபட்டு மற்றவர்களையும் ஈடுபடச் செய்வோம்.**
- ★ **தீய காரியங்களிலிருந்து நாமும் விடுபட்டு மற்றவர்களும் விடுபட உழைப்போம்.**
- ★ **மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்வோம்.**
- ★ **இது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை ஆகும்.**

**பயிற்சி**

**1. சுருக்கமாக விடை தருக.**

அ) ஹில்புல் புழூல் யாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது?

ஆ) அதில் பங்கு கொண்ட முக்கியமான வாலிபர் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.

இ) ஹில்புல் புழூல் உடன்படிக்கை யாருடைய வீட்டில் இடம் பெற்றது?

ஈ) இதன் முக்கிய நோக்கம் யாது?

2. ஹில்புல் புழூல் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவ்வாறு பாராட்டினார்கள்?

**3. செயற்பாடு**

அ) நற்செயல்கள் பெருகுவதால் ஏற்படும் பயன்கள் ஐந்தைப் பட்டியல் படுத்துக.

ஆ) துர்ச்செயல்கள் பெருகுவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்தைப் பட்டியல் படுத்துக.

# 20 நல்ல நண்பர்கள்

அம்னா, நந்தினி, ஆகிபா ஆகியோர் ஆமிராவின் ஆருயிர் தோழிகள். அர்கம், உபைத், ஆகியோர் ஹாதிப் இன் இணைபிரியா நண்பர்களாவர். நட்பில் இணைந்தவர்கள் நண்பர்கள் எனப்படுவார்கள். அவர்கள் உடலாலும் உள்ளத்தாலும், சேர்ந்திருப்பார்கள். எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வார்கள். நல்ல காரியங்களில் ஒத்துழைப்பார்கள், மற்றவரை தீமையிலிருந்து பாதுகாப்பார்கள்.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நல்ல நண்பர்களாவார்கள். இவர்கள் முறையே **ஸாதிக், ஸித்தீக்** என அழைக்கப்பட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறு வயதிலேயே உண்மை பேசுபவராக இருந்தமையால் அவருக்கு **ஸாதிக்** என்ற பெயர் கிடைத்தது. இதன் கருத்து உண்மையாளர் என்பதாகும். ஸித்தீக் என்பது அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புப் பெயராகும். உண்மைப் படுத்தியவர் என்பது அதன் கருத்தாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இளைஞராக வாழும் காலத்தில், மக்காவில் ஓர் அசம்பாவிதம் நிகழ்ந்தது. வெளியார் ஒருவர் மக்காவாசி ஒருவரால் ஏமாற்றப்பட்டார். அவர் தனது நிலையை எடுத்துக் கூறியபோது, மக்கா விலுள்ள பிரமுகர்கள் அப்துல்லா இப்னு ஜுத்ஆன் என்பவரின் வீட்டில் ஒன்று கூடினார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் தத்தம் போஷகர்களுடன் அங்கு சென்றிருந்தார்கள். அப்போதுதான், அவ்விருவருக்கு மிடையில் நட்பு ஏற்பட்டது. நல்லகாரியத்தில் பங்கு கொண்ட அந்த நட்பு இருவரிலும் தொடர்ந்தது. அவர்கள் இருவரும் நட்புக்குச் சிறந்த முன் உதாரணமாக கொள்ளப்படுகிறார்கள்.

அவர்களது இளமைக்கால நட்பின் உச்சக் கட்டமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நுபுவ்வத் கிடைத்த சந்தர்ப்பம் அமைகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புதிய மார்க்கத்தை உபதேசித்து ஆள் தேடி அலைந்த சந்தர்ப்பத்தில் இஸ்லாத்தை ஏற்ற முதல் ஆணாக இவர் மாறுகிறார். இருபது வருட நட்பின் இறுக்கத்தையும், பயனையும் அங்கு வெளிப் படுத்தினார். அவர் தனது நண்பருக்கு உடலாலும், பொருளாலும், உதவியாளராக இருந்தார். உயிர் போகலாம் என்ற தருணத்திலும் கூட இருவரும் தவ்ர் குகையில் இணைந்தே நின்றனர்.

நண்பர்களை, நல்ல நண்பர்கள், கூடாத நண்பர்கள் என்று இரண்டாக வகுக்கலாம். நல்ல நண்பர்களுக்கு வாசனைப்பொருள் விற்பனை யாளரையும், கூடாத நண்பர்களுக்கு உலைக்களத்துக்குச் செ ன்று திரும்புபவரையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உதாரணம் காட்டி விளக்கினார்கள். வாசனைப் பொருள் விற்பனை யாளரிடம் பொருளை வாங்கா விட்டாலும் அவரது வாச னையை யேனும் நுகர முடியும். ஆனால் உலைக்களத்துக்குச் செ ன்றவரது துர்வாடையை அவர் மற்றவர்களுக்கும் அனுபவிக்கச் செய்வார்.

இவ்வாறு நல்ல நண்பரைச் சேர்ந்து வாழ்வோர் நல்லவர்களாகவும் கூடாத நண்பரைச் சேர்ந்து வாழ்வோர் கூடாதவர்களாகவும் கணிக்கப்படுவார்கள். இதனால் தான் நீ உனது நண்பனைப் பற்றிக் கூறு; நான் உன்னைப் பற்றிக் கூறுகிறேன் என ஒரு பெரியார் குறிப்பிட்டார்.

உலகம் அமைதியாகவும், சமூகம் நல்லதாகவும், குடும்பங்கள் முன்மாதிரியாகவும் இருக்க வேண்டுமாயின் நல்ல நண்பர்களின் சகவாசத்தைக் கூட்டிக்கொள்ள வேண்டும். கூடாத நண்பர்களின் சகவாசத்தைத் துண்டித்துக் கொள்ள வேண்டும்.



ஒருவருடன் நட்புக் கொள்ள வேண்டுமாயின் அவரது குணம், நடத்தை, வயது, உறவு கொள்ளும் முறைபோன்றன பற்றி நன்கு சிந்தித்து முடிவு செய்ய வேண்டும் அல்லது பெற்றோர், ஆசிரியர்கள் போன்றோரின் ஆலோசனையைப் பெற்று முடிவெடுக்க வேண்டும். எவரையும் திடீரெனச் சிறிய தேவைகளுக்காக நண்பர்களாக்கிக் கொள்ளக் கூடாது. நட்பு என்பது அவசரமாக வருவதல்ல; பழகப் பழகக் காலந் தாழ்த்தி உருவாகும் பிணைப்பாகும்.

பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசுவது போல நல்ல நண்பர்களோடு சேர்ந்தால் நாமும் மணம் வீசுவோம்.

**ஆதலால், நாம் நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். கூடாதவர்களின் சகவாசத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.**

## பயிற்சி

1. **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் குறிப்பிடுக.**

   அ) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நல்ல நண்பர்கள் ஆவர். ( )

   ஆ) அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது நண்பரை மகிழ்வித்த சம்பவங்கள் பல உள்ளன. ( )

   இ) நல்ல நண்பர்களை அவசரமாகத் தேட முடியும். ( )

   ஈ) தீய நண்பரின் சகவாசத்தை துண்டித்துக் கொள்ள வேண்டும். ( )

2. **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

   அ) நல்ல நண்பர்களிடம் காணப்பட வேண்டிய நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

   ஆ) உங்கள் நண்பர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களிடம் காணப்படும் நல்ல பண்புகள் மூன்றைக் குறிப்பிடுங்கள்.

# 21 எளிமையும், சிக்கனமும்

நபிமார்கள் அனைவரும் எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்து காட்டினர். அல்லாஹ் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மனித சமுதாயத்துக்கு வழிகாட்டியாக அனுப்பி வைத்தான். அவர்களிடம் அழகிய முன்மாதிரிகள் காணப்படுவதையும் சுட்டிக் காட்டினான்.

இதனைக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது. ‘‘நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன் மாதிரிகள் உண்டு *(33:21)*

‘‘அல்லாஹ்வே எனது புறத்தோற்றத்தை அழகுபடுத்தியுள்ளது போல எனது பண்புகளையும் அழகுபடுத்துவாயாக’’ என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிரார்த்தனை செய்து வந்துள்ளார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்பண்பு களில் எளிமையும், சிக்கனமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. **எளிமை என்பது ஏழையாக வாழ்வதல்ல ஆடம்பர மின்றி வாழ்வதாகும். சிக்கனம் என்பது உலோபித்தனம் அல்ல, தேவைக்குப் போதுமான அளவு செலவு செய்து, பகட்டை ஒதுக்கி வாழ்வதாகும்.**



உதாரணமாக ஸுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெரும் கோடீஸ்வரராகவும், சர்வ வல்லமை கொண்ட ஆட்சியாளராகவும் இருந்த போதும் எளிமையாகவும் சிக்கனமாகவுமே வாழ்ந்தார்கள் என அல்லாஹ் கூறியுள்ளான்.

ஆதலால் வாழ்க்கையைத் திருப்தியாக நடத்துவதற்கு எளிமையும், சிக்கனமும் அவசியமான பண்புகளாக உள்ளன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வசதியிருந்தும் ஆடம்பரத்தைத் தவிர்த்துக் கொண்டார்கள். அவர்கள் இஸ்லாமிய அரசின் தலைவராக இருந்தார்கள். அவரிடம் செல்வம் இருந்தது. எனினும் அதனைத் தனது சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. சமூகத்தின் நன்மைக்காகவே பயன்படுத்தினார்கள். செல்வம் அல்லாஹ்வினால் அமானிதமாகக் கொடுக்கப்படுவதாகும். அதனை ஈட்டுவதும், செலவிடுவதும் ஹலாலான வழிமுறையில் இருக்க வேண்டும். இதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்மாதியாக இருந்தார்கள்.

அவர்களது எளிமையான வாழ்க்கைக்கான சில உதாரணங்களை அவதானிப்போம். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேசத்துக்குரிய மனைவியாக இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எளிமையான வாழ்க்கையை இவ்வாறு குறிப்பிட்டார்கள் ''பேரீச்சம் பழமும் தண்ணீருமே எமது உணவாக இருந்தன. சில நேரங்களில் பக்கத்து வீட்டிலுள்ள தோழர்கள், தாம் கறந்த பாலை எமக்கு அன்பளிப்பாக வழங்குவார்கள். அவற்றை நாங்கள் குடித்து வருவோம் (புகாரி)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு பாய் இருந்தது. பகலில் அதனை விரித்து உட்காருவார்கள் இரவில் அதனைக் கதவாகப் பயன்படுத்துவார்கள்.

அவர்கள் பாயின் மீது எதனையும் விரிக்காது வெறும் பாயிலே உறங்குவார்கள். இதனால் அவர்கள் தூங்கி விழித்த பின் அவர்களது மேனியில் அதன் அடையாளம் படிந்திருக்கும். தமது தலைக்குக் கீழ் தோலினாலான தலையணையை வைத்திருப்பார்கள்.

கால்மாட்டில் தோல் பதனிடப் பயன்படுத்தப்படும் இலைகள் குவிக்கப்பட்டிருக்கும். இதனை அவதானித்த உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதிருக்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணிக்கும் போது, தங்கத்தையோ, வெள்ளியையோ, அடிமைகளையோ விட்டுச் செல்லவில்லை. மாறாக ஒரு வெள்ளைக் கோவேறு கழுதை, தான் பயன்படுத்திய பொருட்கள், தர்மமாகப் பெறப்பட்ட ஒரு நிலத்துண்டு என்பவைகளையே விட்டுச் சென்றார்கள்.

தமது தேவையைக் குறைத்து, உள்ளதைப் பயனுள்ள முறையில் செலவிடுவதையே சிக்கனம் என்பார்கள்.

***எனவே நாமும்***

★ ***ஆடம்பரத்தையும் வீண்விரயத்தையும் தவிர்த்து வாழ முயற்சி செய்வோம்.***

★ ***சிக்கனத்தையும் எளிமையையும் கடைபிடித்து வாழப் பழகிக்கொள்வோம்.***

***பயிற்சி***

**1) வெற்றிடங்களை நிரப்புக.**

அ) எளிமையும்.......................உம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பண்புகளில் இரண்டாகும்.

ஆ) ஆடம்பரத்தையும், ..................... ..உம் தவிர்த்து வாழ்வோம்.

இ) செல்வம் அல்லாஹ் வழங்கிய ...................... ஆக இருப்பதால் அதை உரியமுறையில் பயன்படுத்த வேண்டும்.

ஈ) பெரும் செல்வமும், ஆட்சியும் இருந்தும்........................... அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எளிமையாக வாழ்ந்தார்கள்.

2) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எளிமையான வாழ்வு பற்றி ஆயிசா ரழியல்லாஹு அன்ஹா குறிப்பிட்ட விடயங்கள் யாவை?

# 22 இமாம் மாலிக்

*றஹ்மதுல்லாஹி அலைஹி*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் மரணித்த பின்னர், முஸ்லிம்களுக்கு வழிகாட்டிய அறிஞர்கள் இமாம்கள் எனப்பட்டனர். அவர்கள் அறிவிலும் தக்வாவிலும் செயல்பாடுகளிலும் சிறந்து விளங்கினர். அத்தகையவர்களுள் இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் ஒருவராவார்.

இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிறப்புமிக்க அறிஞர்களுள் ஒருவராவார். அவர் ஹதீஸ் துறையிலும் பிக்ஹ் துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.



இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மூதாதையர் யெமன் நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள், இஸ்லாம் அறிமுகமான காலகட்டத்தில் மதீனாவில் குடியேறினர். இமாம் மாலிக் றஹ்மது ல்லாஹி அலைஹி அவாகள் ஹிஜ்ரி 93 இல் மதீனாவில் அனஸ் என்பவரின் மகனாகப் பிறந்தார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹிஜ்ரத்துக்குப் பின், மதீனா நகரம் முஸ்லிம்களின் தலை நகரானது. ஸஹாபாக்களும் தாபிஈன்களும் அங்கு வாழ்ந்தனர். இஸ்லாத்தைப் போதித்துக் கொண்டிருந்தனர். இதனால் அது தலைநகராக மட்டுமன்றி கல்வி நகராகவும் மாறியது. மாணவர்கள் வெளியிடங்களிலிருந்து மதீனாவுக்கு வந்து கற்றுக் கொண்டனர்.

மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், மதீனாவில் பிறந்து வளர்ந்ததால் கற்பதற்கு வெளியே செல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஸஹாபாக்களிலும், தாபிஈன்களிலும் சிறந்த அறிஞர்களிடம் கல்வி கற்றார். காரி அபூ ஹாதிம், ஷிஹாபுஸ் ஸுஹ்ரி, ஜஃபர் ஸாதிக், ராபிஅதுர் ரைஉ முதலானோர் அவரின் ஆசிரியர்களாக இருந்தனர். ஆற்றல் மிகுந்த அவர் சுயமாகவும் தனது அறிவை வளர்த்துக் கொண்டார்.

அவர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்த மதீனாவை விரும்பினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடமாடிய பூமியை கண்ணியப்படுத்தினார். அங்கு பாதணிகளை அணிந்து நடப்பதற்குக் கூட அவர் கூச்சப்பட்டார். கற்பதற்கோ, கற்பிப்பதற்கோ வெளியே செல்வதை அவர் விரும்பவில்லை. ஹஜ்ஜுக்காக மட்டுமே மதீனாவுக்கு வெளியே சென்றார்.

இதனால் அவரை **இமாமுல் மதீனா** என அழைத்தனர். அன்று பிரபலமாக இருந்த ஹதீஸ், பிக்ஹ் கலைகளில் அவர் சி றந்து விளங்கினார். ஹதீஸ்களைத் தொகுத்து **முஅத்தா** என்ற நூலை எழுதினார். பின்னர், அந்நூலை மையமாக வைத்து, மஸ்ஜிதுந் நபவியில் ஹதீஸ் விளக்க வகுப்பை நடத்தினார்.

அது ஒரு திறந்த பாடசாலையாக இருந்தது. மாணவர்களும் அதிதி களும், வளர்ந்தவர்களும் ஒன்றாகக் கற்கும் ஒரு கல்வி நிலையமாக விளங்கியது. அமைதியும் ஒழுங்கும், தூய்மையும், நறுமணமும் கலந்த பக்திபூர்வமான ஒரு வகுப்பாக இருந்தது. சிலபோது கலீபாக்கள் கூட அங்கு சென்று வந்தனர். எல்லோரும் சமநிலையில் பார்க்கப்பட்டனர்.

ஒருமுறை கலீபா ஹாரூன் ரஷீத், தமது சபையில் வந்து பாடம் நடத்துமாறு கேட்டுக் கொண்டார். அப்போது மதீனாவுக்கு வெளியே செல் வதை தாம் விரும்பவில்லை என்றும் அறிவைத் தேடி மக்கள் செல்ல வேண்டுமே தவிர மக்களைத் தேடி அறிவு நகராது என்றும் அறிவுரை வழங்கினார்.

அவரது காலத்தில் பிக்ஹு (இஸ்லாமிய சட்டம்) வளர்ச்சியடைந்திருக்க வில்லை. இதனால் தம்மிடம் வந்த சட்டப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கிக் கொண்டிருந்தார். அவற்றின் தொகுப்பாகவும் விளக்கமாகவும் **மாலிகி** மத்ஹப் உருவானது.

இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அவர்கள் வாழ்ந்த நகரையும் நேசித்தவரும், இஸ்லாமிய வழிமுறையை மக்களுக்குப் போதித்தவருமான இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 179 இல் மதீனாவில் வபாத்தானார்கள். அன்னாரின் ஜனாஸா ஜன்னதுல் பகீஇல் அடக்கம் செய்யப்பட்டது.

**பயிற்சி**

***1.பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுங்கள்.***

*அ) இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி இமாமுல் மதீனா என அழைக்கப்பட்டார்.* ( )

*ஆ) இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி எமனில் பிறந்தார்.* ( )

*இ) மாலிகி மத்ஹபின் ஸ்தாபகர் இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி ஆவார்.* ( )

*ஈ) முஅத்தா என்பது கவிதை நூலாகும்.* ( )

*உ) இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி மதீனாவை அதிகம் நேசித்தார்.* ( )

*2.இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கொண்டிருந்த அன்பை விபரிக்குக.*

*3.இமாமுல் மதீனா என இமாம் மாலிக் றஹ்மதுல்லாஹி அலைஹி அழைக்கப்படுவதற்கான காரணங்கள் யாது?*